**தரம் 5 – 11 வரை**

எண்: 06 எழுத்து: 09

செப்டெம்பர் 2012

# AHARAM
# அகரம்

www.aharam.lk



Des: Sinan

## உங்கள் கனவுகளை நனவாக்குங்கள்




**அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் இப்னு பாஸ்**
**(ரஹிமஹுல்லாஹ்)**

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

40/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமையிலிருந்து தவிர்ந்திருப்போம்!



பெருமை என்பது தன்னைப் பற்றி உயர்வாக எண்ணி, அடுத்தவர்களை இழிவாகக் கருதுவதும் சத்தியத்தை மறைத்து மக்களை ஏமாற்றுவதுமாகும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:
“யாருடைய உள்ளத்தில் கடுகளவு பெருமையிருக்குமோ அவன் சுவனம் நுழைய மாட்டான்.”
அப்போது ஒரு மனிதர் கேட்டார்: “ஒருவர் தனது ஆடையும் பாதணியும் அழகாக இருக்க வேண்டும் என விரும்புகிறார் (என்றால் அதுவும் தற்பெருமையா?)”
அதற்கு நபியவர்கள், “நிச்சயமாக அல்லாஹ் அழகானவன். அவன் அழகையே விரும்புகிறான். பெருமை என்பது சத்தியத்தை மறுப்பதும் மக்களை இழிவாகக் கருதுவதுமாகும்” என்று கூறினார்கள்.
பெருமையானது அல்லாஹ் எமக்கு அருளியுள்ள உயர்வான அருட்கொடைகள் பற்றிய பிழையான எண்ணங்களினால் தோன்றும் தீய குணமாகும்.
எனவே, எமக்குக் கிடைத்துள்ள அருட்கொடைகளைப் பார்த்து நாம் பெருமையடையக் கூடாது. மாறாக, அதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தக்கூடிய அடியார்களாக மாறுவதன் மூலம் பெருமையிலிருந்து எம்மைப் பாதுகாக்க முடியும்.
எனவே, நாம் ஒவ்வொருவரும் பெருமை பற்றி அறிந்து கொள்வதோடு அந்தக் கொடிய உணர்விலிருந்து எம்மைப் பாதுகாக்குமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிவோம். நரக வேதனையிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வோம்.

எம்.ஐ. ஹம்தா

www.aharam.lk
facebook இல் Like செய்யுங்கள்...
www.facebook.com/aharamJmf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம்

எண்: 06 செப்டெம்பர், 2012 எழுத்து: 09



**பிரதம ஆசிரியர்**
ஏ.ரி.எம். நௌபல்

**ஆலோசனைக் குழு**
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

**ஆசிரியர்**
எம்.ஏ.எல்.எம். பஸ்லுல் பாரிஸ் (நளீமி)

**உதவி ஆசிரியர்**
ஜே.எம். அஸீம் (நளீமி)

**தளக் கோலம்**
எம்.ஐ.எம். ஹரீஸ்

சந்தா விபரம்
தனிப் பிரதி 40 /-
1 வருட சந்தா 700 /-
6 மாத சந்தா 350 /-

தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமடகொட வீதி,
கொழும்பு – 09.
தொ.பே: 011 268 9324, 011 720 6575
வக்ஸ்: 011 2686030
Email: *editor@aharam.lk*
*www.facebook.com/aharamJmf*

## உள்ளே...

**மின்சாரம் பாய்ச்சும் விலாங்கு மீன்** 06





14



12




**எவ்வாறு நேரத்தை முகாமைத்துவம் செய்யலாம் ?** 27





08



37

**பாடத்திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| வரலாறு | 17 | தமிழ் | 25 |
| விஞ்ஞானம் | 29 | புலமைப் பரிசில் | 38 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக் களம் சூடுபிடிக்கும் காலம்

நீண்ட இடைவெளிக்குப் பிறகு முஸ்லிம் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. அரையாண்டுப் பரீட்சையுடன் முடிவடைந்த பாடசாலைத் தவணையின் போது விட்ட பிழைகளைத் திருத்திக் கொள்ளவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ளவும் இந்த விடுமுறையைப் பயன்படுத்தியவர்கள் வெற்றி பெற்றவர்களே! நோன்பு காலத்திலும்கூட ஒரு மாணவனின் கால அட்டவணை கற்றலை அடிப்படை யாகக் கொண்டே அமைய வேண்டும். அதிலும் குறிப்பாக சற்றுக் குறைவாகப் புள்ளிகள் எடுத்த பாடங்கள் தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்திப் படிப்பதற்கும் பலரிடம் அது பற்றிக் கலந்துரையாடி உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் இக்காலத்தைப் பயன்படுத் தியிருப்பீர்கள் என்றே நம்புகிறேன்.

அடுத்து வரும் சில மாதங்கள் மாணவர்களைப் பொறுத்தமட்டில் மிக முக்கிய காலம் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள். கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைக்கான இறுதிக் கட்டத் தயார் நிலைக்கான காலமிது. 11 வருடங்கள் படித்து வாழ்க்கையின் மிக முக்கியமான பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் இக்காலப் பிரிவை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பதில்தான் பரீட்சையின் வெற்றி பெருமளவு தங்கியுள்ளது.

சாதாரண தரப் பரீட்சையில் உயர் தரத்துக்கான தகைமைகளுடன் சித்தி பெறுபவர்களும் அவ்வாறு சித்தி பெறாதவர்களும் இரு வேறு கோணங்களாகவே நோக்கப்படுகின்றனர். வாழ்க்கைப் பாதையின் ஒரு பிரிகோடாகவே இது அமைந்துள்ளது. திறமைச் சித்திகள் பெற்று உயர்தரத்தில் பிரவேசிப்பவர்கள் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு வரை செல்லும் வாய்ப்பு உள்ளது. அதன் பின்னரும் சமூகம் மதிக்கும் உயர் தொழில்களில் அமர்த்தப்படும் சந்தர்ப்பமும் ஏற்படும். சாதாரண தரப் பரீட்சையில் சித்தியெய்தத் தவறும்போது எப்படி யான சூழ்நிலைகளைச் சந்திக்க வேண்டும் என்பதையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

இந்த இரு வேறு பாதைகளில் ஒன்றைத் தெரிவு செய்வதில் பரீட்சைப் பெறுபேறு பலமான செல்வாக்கைச் செலுத்தும். பரீட்சை எழுதிய பின்னர் அதைப் பற்றி யோசிப் பதால் பயனில்லை. கிடைக்கும் பெறுபேற்றை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால், பரீட்சைக்கு இன்னும் மூன்று, நான்கு மாதங்கள் இருக்கும் நிலையில் அதனை எப்படி வெல்வது என்று சிந்திப்பதே பொருத்தமானது. சாதாரண தரப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் பத்தாம் பதினொராம் வகுப்புப் பாடப் புத்தகங்களில் இருந்தே எடுக்கப்படுகின்றன. அதற்கு முந்திய வகுப்புகளில் பெற்ற விடயங்களும் இப் பரீட்சையின் போது பயன்படாமலில்லை. எனவே, பத்தாம் பதினொராம் வகுப்புப் பாடப் புத்தகங்கள் சார்ந்த விடயங்களை முறையாகத் தயார்படுத்திக் கொள்ளவும் உத்தேச வினாக்களுக்கு விடை எழுதவும் எழுதிய விடைகளைத் தெரிந்தவர்களிடம் கொடுத்து சரி பார்க்கவும் பழகிக் கொள்ள வேண்டும்.

டியூஷன், பாடக் கருத்தரங்குகள் என்று கடைசி நேரம் வரை சுய கற்றலை மறந்திருப்பது பரீட்சையில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணியாகும். எஞ்சியிருக்கும் காலத்தில் பாடத் திட்டத்தில் எஞ்சியுள்ள பகுதிகளைப் படிப்பதுடன் பழைய பாடங்களையும் முறையாக மீட்டிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். குழுக்களாக இருந்து படிப்பது, வினாக்களுக்கான விடைகளைக் கலந்துரையாடுவது, கடந்த கால வினாப் பத்திரங்களுக்கு விடை எழுதிப் பழகுவதும் அவற்றுக்கான சரியான விடைகள் அடங்கிய ஆவணங்களைத் தேடிப் படிப்பதும் பரீட்சை நோக்கில் படிக்கும் மாணவர்களது அன்றாடப் பழக்கமாக வர வேண்டியவை. ஏனைய வகுப்பு மாணவர்களைப் பொறுத்தவரை ஆண்டிறுதிப் பரீட்சையை எதிர்கொள்ள வேண்டியவர்கள் என்பதால் அவர்களும் முன்னரைவிடவும் அதிக கவனத்துடன் படிக்க முன்வர வேண்டும். ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அல்குர்ஆன் கூறும் கதைகள்

அபூ ஹானிம்

சென்ற இதழின் தொடர்...

## ஆத் சமூகத்தின் சகோதரர்

# ஹூத் (அலைஹிஸ்ஸலாம்)

இப் பரிதாப நிலையில்தான் அல்லாஹ் ஆத் சமூகத்திற்கு தனது மிகப் பெரிய பேரருளான தன் வழிகாட்டலை வழங்க நாடினான். பலவீனர்களுக்கு விடுதலையாகவும் பலசாலிகளுக்கு நேர்வழியாகவும்

ஆத் சமூகம் வாழ்வின் சுவையை அனுபவித்து வாழ்ந்து வந்தது. அல்லாஹ் எண்ணற்ற அருள் களையெல்லாம் அவர்களுக்கு வழங்கினான். ஊற்றெடுக்கும் நீர்ச்சுனைகளை வழங்கினான். பயிர் செய்து நிலத்தை வளமாக்கினார்கள். தோப் புகளை உருவாக்கினார்கள். அல்லாஹ்வின் அருள்களை நிறையவே அனுபவித்தார்கள். சக்திமிக்க உடல் வலிமையை ஆத் சமூகத்தினர் பெற்றிருந்தார்கள். அவர்கள் பெற்றிருந்த அல்லாஹ் வின் ஏனைய அருள்களை விட இது சிறப்பானது.

ஆத் சமூகமோ சிந்திக்கத் தவறிவிட்டது. வலிமைமிக்க உடலைத் தந்தவன் யார்? இவற்றை யெல்லாம் அவன் தந்திருக்கும் நோக்கம் என்ன? பரிதாபம்! அவர்களது அறிவும் இயல்பும் மரணித்தே விட்டன. கற்சிலைகளுக்கு முன்னால் அவர்கள் மண்டியிட்டார்கள். கற்சிலைகளை உதவிக்கு அழைத்தார்கள். நன்மைகள் நிகழும் போதெல்லாம் சிலைகளுக்கே நன்றி செலுத்தி னார்கள். தீங்கு நிகழ்ந்து விட்டால் பதறியடித்து மன்னிக்குமாறு கற்சிலைகளை வேண்டி நின்றார்கள்.

இனி என்ன, பூமிப் பந்தில் குழப்பங்களையும் சீர்கேடுகளையும் உண்டுபண்ணினார்கள். பலவீ னர்களை பலமானவர்கள் ஒடுக்கினார்கள். ஏழை எளியோர்களை வலிமைமிக்கவர்கள் அடக்கி ஆண்டார்கள். அதிகாரப்பிடி பிடித்தார்கள். அவர்களது பிடிக்குள் மனித சமூகம் சிக்கித் தவித்தது. விடுவிக்கும் விடுதலை வீரனை எதிர் பார்த்திருந்தது.

அது அமைய வேண்டுமென்பது அல்லாஹ்வின் விருப்பமாக இருந்தது. அவர்களது உள்ளத்தையும் பார்வையையும் சூழ்ந்திருக்கும் அறியாமை இருள் நீக்கி பிரகாசப் பாதையில் அழைத்துச் செல்லும் தன் தூதரை அல்லாஹ் அனுப்பி வைத்தான். அவர்களிலிருந்தே தெரிவு செய்யப் பட்ட அத்தூதர் அவர்களது பாஷையில் அச்சமூ கத்தின் பாணியில் உரையாடினார். அவர்களைப் பீடித்திருக்கும் மடைமையை நீக்க பெரும் முயற்சி எடுத்தார்.

ஆத் சமூகத்தின் சகோதரர் ஹூத் (அலைஹிஸ் ஸலாம்) அவர்கள் அச்சமூகத்தின் கண்ணியம் மிக்க குடும்பத்தைச் சார்ந்தவர். மிக்க பண்பாடு டையவர். அறிவும் ஆளுமையும் மிக்கவர். அரவ ணைக்கும் உள்ளம் கொண்டவர். இவர்தான் அந்த சமூகத்தின் இறைத் தூதர். அல்லாஹ்வை நோக்கி அழைக்கும் அழைப்பாளர். வழிகேட்டால் நிரம்பியிருந்த அவர்களது மூளையையும் குருதி நாளங்களில் குதித்தோடும் ஷைத்தானிய மடை மைகளையும் விட்டகற்றி திடமான நேர்வழியின் பால் அவர்கள் வர வேண்டும் என்பதற்காகவே தன் வழிகாட்டலை அல்லாஹ் அவர்கள் மீது அருள்பாலித்தான். ஹூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது அழைப்பு ஆத் சமூகத்தில் அதிர்வு களை ஏற்படுத்தத் தொடங்கியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




عَنْ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا قَالَتْ:قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: أَحَبُّ الأَعْمَالِ إِلَى اللهِ أَدْوَمُهَا وَإِنْ قَلَّ (مُسْلِمْ)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "அமல்களில் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பத்திற்குரியது குறைவாக இருந்தாலும் நிரந்தரமாகச் செய்யும் அமலே." (முஸ்லிம்)

அன்பின் சிறார்களே! நாம் ரமழான் மாத நோன்பினை நோற்று அதனைத் தொடர்ந்து பெருநாளினையும் சிறப்பாகக் கொண்டாடிய உற்சாகத்தோடும் மகிழ்ச்சியோடும் ஷவ்வால் மாதத்தினை அடைந்திருக்கின்றோம்.

அல்லாஹ் மனிதனை சுவனத்திற்கு அழைத்துச் செல்வதற்கான வழிகாட்டியாக அல்குர்ஆனை ஆக்கிவைத்து அது இறங்கிய மாதமான ரமழானை கண்ணியமிக்க நோன்பின் மாதமாக ஆக்கி வைத்ததுடன் தொடர்ந்து வரும் ஒரு வருட காலத்திற்கும் மனிதர்களுக்குத் தேவையான ஆன்மிக பயிற்சிக் களமாகவும் ரமழான் மாதத்தினை ஆக்கிவைத்துள்ளான்.

புலன்களையும் பசி, தாகத்தினையும் ஆசைகளையும் அபிலாசைகளையும் பகல் பொழுதுகளில் அடக்கி மேற்கொள்கின்ற அந்த நோன்பின் பயிற்சியானது வெறுமனே பெருநாளுக்கான தயார் படுத்தல் மட்டுமல்ல. மாற்றமாக எமது முழு வாழ்க்கைக்குமான ஆன்மிகப் பயிற்சிக்கான முகவுரையாகும்.

இந்த நோன்பானது ஸஹாபிகளுக்கும் அவர்களைப் பின் தொடர்ந்தோருக்கும் எத்தகைய தொரு சிறந்த ஆன்மிகப் பயிற்சிக் களமாக இருந்துள்ளது என்பதை வரலாற்றினை படித்துப் பார்க்கின்றபோது புரிந்து கொள்ள முடிகின்றது. அந்த வகையில் நாம் இந்த ரமழானில் பெற்றுக் கொண்ட பயிற்சிகளை எவ்வாறு அடுத்த நோன்பு வரையில் தக்க வைத்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றி சிந்திப்பது அவசியமாகும்.

மாணவர்களாகிய நாம் நோன்புக்காகவும் அதனைத் தொடர்ந்து வந்த பெருநாளுக்காகவும் பாடசாலை விடுமுறையில் இருந்து விட்டு மீண்டும் பரபரப்பான கல்வி வாழ்க்கையில் நுழையவிருக்கின்றோம்.

எனவே, எத்தகைய சூழ்நிலைகளை நாம் பாடசாலையிலும் ஏனைய இடங்களிலும் சந்தித்த போதிலும் இந்த ஒரு மாதகால நோன்புப் பயிற்சியில் அடைந்து கொண்ட பிரதான இலக்கான இறையச்சம் எம்மை நெறிப்படுத்த வேண்டும்.

ரமழானில் நாம் ஓதிய அல்குர்ஆனையும் அல்லாஹ்வின் அன்பினை இலக்காகக் கொண்டு தொழுத தொழுகைகளையும் ஏனைய காலத்திலும் எம்மால் முடிந்தவரை நிரந்தரமாகச் செய்ய முயற்சிக்க வேண்டும்.

ஏனெனில், நாம் செய்கின்ற அமல் அது குறைவாக இருந்தபோதிலும் நிரந்தரமாகச் செய்கின்ற போது அல்லாஹ்விடத்தில் மிக விருப்பத்திற்குரியதாகக் கணிக்கப்படுகின்றது என்பதை மேலுள்ள ஹதீஸின் வாயிலாக அறிகின்றோம்.

அதேபோன்று ரமழானில் நாம் பெற்றுக் கொண்ட தியாக உணர்வும் விட்டுக் கொடுப்புகளும் ஏனைய மாணவர்களோடும் எமது நண்பர்களோடும் பழகுகின்றபோது எமது உறவுக்குள் இத்தகைய விட்டுக் கொடுப்புகள், தியாகங்கள், அர்ப்பணங்கள் என்பன எம்மை அலங்கரிக்க வேண்டும்.

இவ்வாறு நோன்பு அல்லாத அதனைத் தொடர்ந்து வருகின்ற மாதங்களில் ரமழானில் நாம் நோற்ற நோன்பு எம்மை வழிப்படுத்துமாக இருந்தால் அதுவே நாம் அல்லாஹ்வுக்காக நோன்பிருந்து பெற்றுக்கொண்ட ரப்பானியப் பயிற்சியாக அமையும் என்பதை மனதில் இருத்தி செயற்பட முயற்சிப்போம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தனது ஸஹாபிகளுடன் ஆலோசனை கேட்கத் தவறுவதில்லை. தீர்மானங்களை தனியாக எடுக்காமல் பிறரின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கேட்ட பின்னரே நபியவர்கள் தீர்மானமெடுப்பவர்களாக இருந்துள்ளார்கள். இவ்வாறுதான் பத்ர் யுத்தத்தில் கைதிகளாகப் பிடிபட்டவர்கள் விடயத்திலும் நடந்து கொண்டார்கள். பத்ர் முஸ்லிம்களுக்கு முதல் யுத்தம் என்பதால் யுத்தக் கைதிகளை என்ன செய்ய வேண்டும் என்ற வழிகாட்டல் அதுவரை கிடைக்கப்பெறவில்லை. எனவே, நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஸஹாபிகளுடன் கைதிகளைப் பற்றி ஆலோசித்தார்கள்.

# ஆலோசனை கேட்டலும் தீர்மானமெடுத்தலும்

அப்போது அபூ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! இவர்கள் நமது தந்தை வழி உறவினர்கள். நமது சகோதரர்கள் மற்றும் நெருக்கமான குடும்பத்தார்கள். எனவே, இவர்களிடம் ஈட்டுத்தொகை (பித்யா) பெற்று இவர்களை விடுதலை செய்வோம். நாம் வாங்கும் ஈட்டுத்தொகை இறைநிராகரிப்பாளர்களை எதிர்ப்பதற்கு நமக்கு உதவியாக இருக்கும். மிக விரைவில் அல்லாஹ் இவர்களுக்கு நேர்வழி காட்டக் கூடும். அப்போது இவர்களும் நமக்கு உதவியாளர்களாக மாறுவர்" என்று கூறினார்கள்.

பின்பு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம், "கத்தாபின் மகனே! நீங்கள் என்ன யோசனை கூறுகிறீர்கள்?" எனக் கேட்டார்கள்.

"அல்லாஹ்வின் மீது ஆணையாக! அபூ பக்ர் கூறிய ஆலோசனையை நான் விரும்பவில்லை. மாறாக, இவர்களைக் கொலை செய்வதே எனது யோசனை. எனது இன்ன உறவினரை என்னிடம் கொடுங்கள். அவர் கழுத்தை நான் வெட்டுகிறேன். அக்கீல் இப்னு அபூதாலிபை அலியிடம் கொடுங்கள். அலி அவர் கழுத்தை வெட்டட்டும். ஹம்ஸாவிடம் அவரது இன்ன சகோதரரைக் கொடுங்கள். அவர் அவரது கழுத்தை வெட்டட்டும். இதன் மூலம் இணைவைப்பவர்கள் மீது எங்களது உள்ளத்தில் எந்தப் பிரியமும் இல்லை என்று அல்லாஹ் தெரிந்து கொள்வான். அது மட்டுமா! இப்போது கைது செய்யப்பட்டிருப்பவர்கள் குறைஷிகளின் தலைவர்களும் அவர்களை வழி நடத்தும் கொடுங்கோலர்களும் ஆவார்கள்" என்று உமர் (ரழியல்லாஹு அன்ஹு) கூறினார்கள்.

அபூ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறிய ஆலோசனைக்கு ஏற்ப, நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கைதிகளிடம் ஈட்டுத்தொகை பெற்று உரிமையிட்டார்கள். ஈட்டுத் தொகை கொடுக்க இயலாத மக்கா கைதிகள் மதீனாவை சேர்ந்த பத்து சிறுவர்களுக்கு எழுத, படிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று பணிக்கப்பட்டனர். அவ்வாறு சிறுவர்களுக்கு நன்கு எழுத, படிக்கக் கற்றுக் கொடுத்தவுடன் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

மறுநாள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் அபூ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் அழுதவர்களாக இருந்தார்கள். அவ்விடம் வந்த உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! நீங்களும் உங்களது தோழரும் ஏன் அழுகிறீர்கள்? அழுகைக்குரிய செய்தி எதுவும் இருப்பின் கூறுங்கள் முடிந்தால் நானும் அழுகிறேன். முடியவில்லையென்றால் நீங்கள் அழுவதற்காக நானும் அழ முயற்சிக்கிறேன்" என்றார்கள்.

அதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், "ஈட்டுத்தொகை வாங்கியதன் காரணமாக உமது தோழர்களுக்கு ஏற்பட்டதை எண்ணி நான் அழுகிறேன். (அருகில் உள்ள ஒரு மரத்தை சுட்டிக் காண்பித்து) இம்மரத்தை விட நெருக்கமாக அவர்களுக்குரிய வேதனை எனக்குக் காண்பிக்கப்பட்டது" என்றார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் தீர்மானத்தை அல்லாஹுத் தஆலா திருத்தினான். அந்தத் தீர்மானத்திற்காக நபியவர்கள் மனம் வருந்தி அழுதுள்ளார்கள். தீர்மானங்கள் எப்போதும் சரியாக அமையாது. தவறாகவும் வாய்ப்புள்ளது. ஆனால், தவறான தீர்மானத்தை மேற்கொண்ட பின்னர் அதிலேயே வரட்டுப் பிடிவாதத்துடன் நிலையாக நிற்பது அறிவுடைமையாகாது. தவறான தீர்மானங்களை ஏற்கவும் திருத்திக் கொள்ளவும் நாம் பழக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரம் பாய்ச்சும் விலாங்கு மீன்




ஆலிப் அலி (இஸ்லாஹி) www.aliaalif.tk

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுப வர்களுக்கு விலாங்கு மீனை உதாரணமாகக் கூறுவார்கள். ஏனெனில், விலாங்கு மீன் மீனைக் கண்டால் வாலையும் பாம்பைக் கண்டால் தலையையும் காட்டி தந்திரமாகத் தப்பித்துக் கொள்ளும். விலாங்கு மீன்கள் பார்ப்பதற்குப் பாம்பு போன்று காணப்பட்டாலும் அவை மீனினத்தைச் சேர்ந்தவையாகும். உருண்டையான, நீண்ட உடலமைப்பைக் கொண்டிருக்கும் இவை அங்குயிலிபோமாஸ் (Anguilliform) என்ற விலங்கியல் பட்டியலில் உள்ளடக்கப்படுகின்றன.

விலாங்கு மீன்களின் மேற்புறம் கறுப்பு மற்றும் சாம்பர் நிறத்திலும் வயிற்றுப் பகுதி மஞ்சள் நிறத்திலும் இருக்கும். தலைப் பகுதி பாம்பினது முகச் சாயலை ஒத்திருக்கும். வால் பகுதி மீனின் வாலை ஒத்திருக்கும். மிகக் குறைந்த அளவில் இவற்றின் உடலில் செதில்கள் காணப் படும். அத்தோடு சுவாசிப்பதற்கான செதில்களும் முகத்தின் இரு மருங்கிலும் காணப்படுகின்றன. விலாங்கு மீன்கள் 2.5 மீட்டர் நீளம், 20 கிலோ கிராம் நிறைவரை வளரக் கூடியன.

விலாங்கு மீன்கள் ஆழமற்ற கடல் பகுதி களிலும் மணல், சகதி நிறைந்த இடங்களிலும் பாறைகள் மற்றும் பவளப் பாறைகளின் இடுக்கு களிலும் அதிகமாக வாழ்கின்றன. அத்தோடு ஆறு, குளம், ஏரி போன்ற இடங்களிலும் வாழ்கின்றன. இவை நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய உயிரின மாகையால் நீரில்லாதபோது சேற்றில் நீண்ட நாட்களுக்கு உணவின்றி அவற்றால் வாழவும் முடியும். விலாங்கு மீன்களில் 800 வகை இனங்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

தென் அமெரிக்காவின் அமேசன் மற்றும் அதன் கிளை ஆறான ஓரினோகோ (Orinoco) ஆற்றுப் பகுதிகளில் 'எலக்ட்ரோ போரஸ் எலக்ட்ரிக்கஸ்' என்ற ஒருவகை விலாங்கு மீன்கள் காணப்படு கின்றன. இவை தமது உடலிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்து பீய்ச்சி அடிக்கும் அற்புத ஆற்றல் கொண்டவை. இவை 'இலக்ட்ரிக் ஈல்ஸ்" எனவும் அழைக்கப்படுகின்றன. பொதுவாக எமது மின் கம்பங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் மின் சாதனங்களின் அருகில் "அபாயம்- 440V மின்சாரம்" என அபாயக் குறியீடுகளைத் தொங்க விட்டிருப் பார்கள். ஆனால், இவ்வகை விலாங்கு மீன்கள் தமது உடலிலிருந்து 650V மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன. இறை வல்லமையை உணர்ந்து கொள்வதற்காக அல்லாஹ் இப்படைப்பில் இத்தகைய அத்தாட்சியை எமக்குக் காட்டுகின்றான்.

இவற்றின் பயங்கரமான மின் ஆற்றல் பெரிய தொரு குதிரையைக் கூட 6 மீட்டர் தூரத்திற்குத் தூக்கி எறியும் வல்லமை கொண்டதாகும். உடலில் பட்டதும் மனிதர்களைக் கூட கொன்றுவிடும் பயங்கர மின்னாற்றல் இவற்றிடம் காணப்படு கின்றது. விலாங்கு மீன் எப்போதும் அதன் மின் னாற்றலைப் பயன்படுத்துவதில்லை. உணவைப் பற்றுவதற்காகவோ அல்லது எதிரியிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவோ எதிரியைக் கொல்வதற்காகவோதான் இவை தமது மின்னாற் றலைப் பயன்படுத்துகின்றன. தமது உணவின் மீதோ அல்லது எதிரி விலங்கின் மீதோ மின்னாற்றலை வெளிப்படுத்தியபடி மோதினாலே அது இறந்து விடும். அல்லது நீர் மின்னைக் கடத்தும் ஊடக மாதலால் தூரத்திலிருந்தே மின்னைப் பாய்ச்சிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்றுவிடவும் இவற்றால் முடியும். இவை மற்றைய வகை மீன்கள், தவளைகள், பாசித் தாவரங்கள் போன்றவற்றை உணவாகக் கொள் கின்றன. அத்தோடு பழங்கள் மற்றும் விதைகளையும் இவை உண்கின்றன.

விலாங்கு மீனின் உடலின் உள்ளக அமைப்பு மிகவும் விசித்திரமானது. அதன் மொத்த உடல் நீளத்தின் ஐந்தில் ஒரு பகுதியையே அதன் உள்ளக உடல் உறுப்புகள் கொண்டுள்ளன. எஞ்சியுள்ள பகுதி முழுமையாக மின்சாரத்தை உற்பத்தி செய் வதற்கான உறுப்புக்களைக் கொண்டுள்ளது.

இவற்றின் மின்சார அமைப்பு ஒரு மின் கலத்தின் (Battery) அமைப்பை ஒத்ததாகும். மின் கலத்தில் நேர்(+), மறை(-) மின் ஏற்றங்கள் இருப்பது போன்று இவற்றின் உடலிலும் காணப் படுகின்றன. மின் சுற்று முழுமை பெற நேர், மறை மின்னேற்றங்கள் அவசியம். இவ்விலாங்கு மீனின் தலைப்பகுதி நேர் ஏற்றமாகவும் வால் பகுதி மறை ஏற்றமாகவும் தொழிற்படுகின்றது.

இவற்றின் உடலில் இரண்டு வித்தியாசமான வெவ்வேறு மின்சார உற்பத்தி உறுப்புக்கள் அமைந்துள்ளன. ஒன்று சாக்ஸ் (Sacks). இவ்வுறுப்பின் மூலம் 5 முதல் 10 வோல்ட் வரை மிகக் குறைந்த மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இதனைப் பயன்படுத்தி தம்மைச் சூழ மின்சாரத்தை அனுப்பி பிற விலாங்கு மீன்களுடன் தொடர்பு கொள்ளவும் இடம்விட்டு இடம் நகரவும் இரையின் இருப்பி டத்தைத் துப்பறியவும் செய்கின்றன. மற்றைய உறுப்பு பிரதான மின்கலத்தையும் (Main battery) வேட்டை உறுப்பையும் (Hunter organ) கொண் டுள்ளது. இவ்விரண்டு பகுதிகளும் மின்சாரத்தை சேமித்து வைக்கவும் அதை தேவையின்போது வெளிப்படுத்தவும் பயன்படுத்துகின்றன.

வயது அதிகரிக்க அதிகரிக்க விலாங்கு மீனிடம் காணப்படும் மின் ஆற்றலும் அதிகரிக்கின்றது. இவை உயிருடன் இருக்கும்போது மட்டுமல்லாமல் இறந்து 10 மணி நேரத்துக்குப் பின்பும்கூட உடலில் சேமித்து வைக்கப்பட்டிருந்த மின்சாரத் தினால் மின் ஆற்றல் வெளிப்பட்டுக் கொண்டி ருக்கும். இதன்போது அதனை நெருங்கும் உயிர் களுக்கும் ஆபத்து ஏற்படுகின்றது.

1938ம் ஆண்டு நியூயோர்க் உயிரியல் பூங்காவின் பொறுப்பாளர் W. Coate மற்றும் நியூயோர்க் பல்க லைக்கழகத்தின் இயற்பியலாளர் R.T.Cox ஆகியோர் இணைந்து மேற்கொண்ட சுவாரஷ்யமான ஆய்விலிருந்தே விலாங்கு மீன்களிடம் மின் ஆற்றல் இருப்பது கண்டறியப்பட்டது. பூங்காவில் விலாங்கு மீன்கள் வைக்கப்பட்டிருந்த தொட்டியில் 2 வோல்ட் நியோன் மின்குமிழை மறையேற்ற (Negative) மின்கம்பியுடன் இணைத்து மின்கம்பியை தொட்டியில் இட்டபோது அந்த மின்குமிழ் எரியத் துவங்கியது. இது அவ்வாய்வாளர்களைப் பெரிதும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

விலாங்கு மீனைப் பண்டைய காலத்து மக்கள் புனிதமாகக் கருதியுள்ளனர். பண்டைய ரோமா னியப் பேரரசர்கள் இவ்வகை மின்சார விலாங்கு மீன்களைக் கொண்டு தமது எதிரிகளைக் கொலை செய்துள்ளனர். இவை உயிரைப் போக்கும் சக்தியைக் கொண்டுள்ளன என்று அறிந்திருந் தார்களே அன்றி, இவற்றின் உடலில் உள்ள அபரி மிதமான மின்னாற்றலை அவர்கள் அறிந்திருக்க வில்லை. ரோம அரசர்கள் தமது அரண்மனையைச் சூழ குளங்களை அமைத்து அவற்றில் இவ்வகை விலாங்கு மீன்களையும் அதிகமாக வளர்த்துள் ளனர். அதேபோன்று குற்றமிழைத்தவர்களையும் அரசியல் எதிரிகளையும் கட்டுப்படாத அடிமை களையும் இக்குளத்தில் தள்ளி இவற்றின் மூலம் கொலைத் தண்டனைகளை நிறைவேற்றியுள்ளனர் என்பதனை வரலாறு பதிவு செய்துள்ளது.

ஆற்று நன்னீரில் வாழக்கூடிய விலாங்கு மீன்கள் முட்டையிடும் பருவத்தை அடைந்ததும் கடலின் உப்பு நீரை நோக்கிப் பயணிக்கின்றன. ஒரினோகோ ஆற்றுப் பகுதியில் இருக்கும் விலாங்கு மீன்கள் சரகாஸோ (Sargasso) கடலை நோக்கி பல்லாயிரம் கிலோ மீட்டர்கள் பயணித்து கடலின் மிக ஆழத்தில் பாதுகாப்பான இடத்தில் முட்டையிட்டுவிட்டு மீண்டும் தாம் வாழு மிடத்தை நோக்கி வந்துவிடுகின்றன. முட்டையி லிருந்து வெளிவரும் 'லார்வா' எனப்படும் குட்டி விலாங்கு மீன்கள் வளைகுடா நீரோட்டத் தினோடு தங்களது பயணத்தை ஆரம்பிக்கின்றன. இவை ஒரு வருடம் பயணித்து வட அமெரிக் காவின் கடற்கரையையும் மூன்று ஆண்டுகளில் ஐரோப்பிய கடற்பகுதிகளையும் அடைகின்றன. பின்னர் மீண்டும் இவை வளைகுடா நீரோட்டத் தினூடாகத் திரும்பி தங்கள் பெற்றோர் வாழும் தென் அமெரிக்காவின் ஆற்று முகத்துவாரங்களை அடைகின்றன. இதன்போது இவை நன்கு வளர்ச்சியுற்றிருக்கும். அவை வளர்ச்சியடைந்து முட்டையிடும் காலமாகும்போது மீண்டும் கடல் பயணத்தை ஆரம்பிக்கின்றன. இவ்வாறு விலாங்கு மீன்களின் வாழ்க்கைப் பயணம் சுழல்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அறிவுக்கு விருந்து

தப்ஸீரின் தந்தை யார்?

இப்னு அப்பாஸ் (ரழியல் லாஹு அன்ஹு)

மலேசியாவின் முதல் பிரதமர் யார்?

அப்துர் ரஹ்மான்

கொன்ஸ்தாந்து நோபிளை வெற்றி கொண்ட கலீபா யார்? முஹம்மத் இப்னு பாத்திஹ்

'அல்மஹ்ரிப்' என அழைக்கப்படும் பிரதேசம் எது?

வட ஆபிரிக்கா

ஷிக்வா எனும் கவிதை நூலை எழுதியவர் யார்?

அல்லாமா இக்பால்

சிசிலி தீவைக் கைப்பற்றிய மன்னர் யார்?

மன்னர் 2ஆம் இப்றாஹீம்

*பாதிமா ஸஹ்ரா, தரம் - 10*
*நீர்/ அல்ஹிலால் மத்திய கல்லூரி*

## மனித உடல் பற்றிய தகவல்கள்

மிக நீண்ட எலும்பு - தொடை எலும்பு

மூட்டுக்களின் எண்ணிக்கை - 230

மிகச் சிறிய எலும்பு - காதிலுள்ள எலும்பு (3mm)

விலா எலும்புகளின் எண்ணிக்கை - 24

எலும்புகள் அதிகமுள்ள பகுதி - கைகள்

மென்மையான உறுப்பு - மூளை

எலும்புகளின் மொத்த எண்ணிக்கை - 206

பிறப்புக்குப் பின் வளர்ச்சியடையாத பகுதி - கருவிழிப் படலம்

மிக வன்மையான பகுதி - பல் மிளிரி

மிகப் பெரிய சுரப்பி - தைரொய்ட்

மிகப் பெரிய அங்கம் - தோல்

முதலில் இறக்கும் பகுதி - மூளைக் கலங்கள்

மிகப் பெரிய தசை - இதயத் தசை

*எஸ்.எச். ரிஸ்மன் சீபா,*
*கமு/ அல்- மிஸ்பாஹ் மகா வித்தியாலயம்*
*கல்முனைக்குடி*

## பொதுத் தகவல்கள்

- இரத்தம் உறைவதற்கு உதவும் விற்றமின் 'விற்றமின் k' ஆகும்.
- உலகிலேயே மிகச் சிறிய பறவையான ஹம்மிங்பேர்டின் நீளம் 5cm ஆகும்.
- உலகிலேயே மிகப் பெரிய மலர் 'ரெப்லேயொ'வாகும்.
- உலக நாடுகளின் மொத்த கடற்கரை தூரம் 5 இலட்சத்து 4 ஆயிரம் கிலோ மீற்றர் ஆகும்.
- தண்ணீரின் நிரந்தர கடினத் தன்மைக்குக் காரணம் கல்சியம் அல்பேற்று ஆகும்.
- உலகிலேயே அதிகளவு நீர் மின்சக்தியை உற்பத்தி செய்யும் நாடு ஜப்பான்.
- அதிக துணைக் கோள்களைக் கொண்ட கிரகம் சனி. அதற்கு 22 துணைக் கோள்கள் காணப்படுகின்றன.
- புவி அதிர்வை குறித்துக் கொள்ளும் கருவி புவி அதிர்வு மானி ஆகும்.
- கட்டாரின் தலை நகரம் டோஹா.
- ஒட்டகங்களை விட நீர் இல்லாமல் அதிக காலம் உயிர் வாழக் கூடிய அங்கிகள் எலிகளாகும்.

*ஜலால்தீன் பாத்திமா ஸிபானி*
*மதலாம் வருடம்*
*பாத்திமா ஸஹ்ரா மகளிர் அரபுக் கல்லூரி*
*ஒட்டமாவடி*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பெண்கள்



### நோபிள் விருது வென்ற முதல் பெண்

உலகில் முதன் முதல் நோபிள் பரிசை வென்ற பெண் என்ற பெருமைக்குரியவர் போலந்து நாட்டைச் சேர்ந்த மேரி கியூரி ஆவார். 1903 ஆம் ஆண்டு இரசாயனவியல் துறையில் இவர் நோபிள் பரிசை வென்றார். பொலோனியம் என்ற மூலகத்தைக் கண்டு பிடித்தமைக்காகவும் ரேடியம் கதிர் வீச்சு பற்றி உலகிற்கு தெரியப்படுத்தியமைக்காகவும் இந்த உயர் விருது இவருக்கு வழங்கப்பட்டது. இவரது மகளான ஜூலியட் கியூரி நோபிள் பரிசை வென்ற இரண்டாவது பெண் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### விண்வெளியில் முதல் பெண்

வலன்டீனா விளாடிமீரொவ்னா டெரெஷ்கோவா என்பவர்தான் முதலாவது விண் வெளிக்குச் சென்ற பெண் ஆவார். சோவியத் ஒன்றியத்தின் விண்வெளி வீராங்கனையான இவர், 1937 மார்ச் 6ஆம் திகதி பிறந்தார். வஸ்தோக் 6 விண்கலத்தில் 1963ஆம் ஆண்டு ஜூன் 16ஆம் திகதி விண்வெளிக்கு சென்று அங்கு 3 நாட்களுக்குச் சற்றுக் குறைவாகத் தங்கியிருந்து வெற்றிகரமாகத் திரும்பினார். இவருக்கு அடுத்ததாக ஸ்வெட்லானா சவீத்ஸ்கயா (1982) என்ற பெண் விண்வெளி சென்று திரும்பினார்.

### முதல் விண்கல செலுத்துநர்

அமெரிக்க விண்ணியல் ஆய்வாளரான இலின் மேரி கொலின்ஸ் என்பவர்தான் விண் கலத்தைச் செலுத்திய முதலாவது பெண் ஆவார். இவர் 1956ஆம் ஆண்டு நியூயோர்க்கில் பிறந்தார்.

## உலோகங்கள் பற்றிய தகவல்கள்

தண்ணீரில் மிதக்கும் உலோகம்
- பொட்டாசியம்

X கதிர்கள் ஊடுருவாத உலோகம்
- காரியம்

உலோகங்களின் அரசி
- வெள்ளி

மனிதன் உபயோகித்த முதல் உலோகம்
- செப்பு

உயிரைக் காப்பாற்றும் உலோகம்
- ரேடியம்

தானாகப் பற்றி எரியும் உலோகம்
- பொஸ்பரஸ்

பளபளப்புள்ள ஒரே உலோகம்
- அயோடின்

செயற்கை மழை பொழிவதற்குத் தேவையான இரசாயனப் பொருள்
- சில்வர் அயோடைட்

வெப்பத்தால் உடன் பாதிக்கப்படும் உலோகம்
- வெள்ளி

ஒளி புகக்கூடிய ஒரே உலோகம்
- மைக்கா

எடை மிகுந்த உலோகம்
- ஆஸ்மியம்

கலம் என்ற வர்த்தகப் பெயரைக் கொண்ட இரசாயானச் சேர்வை
- அலுமினியம் சல்பேற்று

சோடா அமிலத் தீயணை கருவிக்குப் பயன்படுத்தும் சோடாவின் இரசாயனப் பெயர்
- சோடியம் இரு காபனேற்

இதுவரை கண்டறியப்பட்டுள்ள மூலகங்களின் எண்ணிக்கை
- 110

ஏ.எச். அப்துல்லாஹ்
தரம்: 4
கமு/அல்மிஸ்பாஹ் ம.வி.
கல்முனைக்குடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) நரகில் கண்ட சில நங்கையர்கள்

- தன் கூந்தலை அந்நிய ஆடவர் முன் மறைக்காதவள்.
- தன் கணவனை நாவால் திட்டியவள்.
- புறம் பேசித் திரிந்தவள்.
- பிறபெண்களின் குற்றங்களை அம்பலம் செய்தவள்.
- தன் சரீரத்தை அலங்கரித்து பிறருக்குக் காட்டியவள்.
- அந்நியக் குழந்தைகளுக்கு அனுமதியின்றிப் பால் கொடுத்தவள்.
- கணவனின் உத்தரவின்றி வெளியில் சென்றவள்.

*எம்.ஆர்.எம்.ரயீஸ்*
*தரம்: 11*
*பு/ வேப்பமடு அர்ரஹ்மா மு.ம.வி.*

## உலகின் நீளமான நதிகளும் அமைந்துள்ள இடங்களும்

| பெயர் | இடம் |
|---|---|
| நைல் நதி | எகிப்து |
| யங்டிசி கியாங் | சீனா |
| ஒபீ இர்டுஷ் | ரஷ்யா |
| அமேசன் | பிரேசில் |
| மிசூரி/ மிசிசிபி | அமெரிக்கா |
| ஹோவங்ஹெர் | சீனா |
| மிஹொங் | மியன்மார்/ தாய்லாந்து |
| லீனா | ரஷ்யா |
| மகெனசி | கனடா |
| ஆமூர் | ரஷ்யா |
| நைகர் | நைஜீரியா |
| கொங்கொ | கொங்கொ |
| யெனிசி | ரஷ்யா |
| பரானா | ஆர்ஜன்டீனா |
| மிசுரி- ரெட்ரொக் | அமெரிக்கா |
| மரேடாலிங் | அவுஸ்திரேலியா |
| யூப்றடிஸ் | ஈராக் |
| ஹப்பிடிஸ் | நேபாளம் |
| கபோட் | காஷ்மீர் |

*ஏ.ஆர்.எப். ஸீனா, தரம் - 6*

*மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை*

## இலங்கை பற்றிய தகவல்கள்

**பெயர்:** இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசு

**மொழி:** சிங்களம், தமிழ், ஆங்கிலம், (முறையே 78%, 18%, 8%)

**நீளம்:** பேதுருமுனை தொடக்கம் தெய்வேந்தர முனை வரை - 432 km

**அகலம்:** கொழும்பு தொடக்கம் சங்கமன் கந்தை வரை - 224 km



**பரப்பளவு:** 65610 $km^2$

**சனத்தொகை:** 20, 222, 240

**சனத்தொகை வீதம்:** பிறப்பு 1000க்கு 13.97

**இனம்:** சிங்களம் 73.8%, இந்து 8.5%, முஸ்லிம் 7.27%,

**மதம்:** பௌத்தம் 69.1%, இந்து 7.1%, இஸ்லாம் 7.6%, கத்தோலிக்கம் 6.2%

*எஸ். அப்ரான்*
*தரம்: 9*
*கமு/ அல்மனார் ம.க. மருதமுனை*

## பொது அறிவு

பறவைகள் கூடு கட்டாத மரம் எது? இலந்தை

மனித உடலில் காணப்படும் மிகப் பெரிய உறுப்பு எது? கல்லீரல்

மனித இருதயத்தின் ஏடை 220-260 கிராம்

மனித உடலில் இரத்தம் பாயாத ஓரே ஒரு இடம் - கருவிழிகள்

சராசரி மனித உடலில் இருக்கும் இரத்தத்தின் அளவு எவ்வளவு? 5 l

மனிதன் இறந்த பின்னும் வளரும் சிற்றுறுப்புக்கள் எவை? தலைமுடி, நகம்

மாற்று சிகிச்சை மூலம் மனிதனுக்குப் பொருத் தக்கூடிய உறுப்புக்கள் எவை?
கண், இருதயம், சிறுநீரகம்

*எம்.எப். மபாஸா*
*பாத்திமா ஸஹ்ரா ம. அ. க*
*ஓட்டமாவடி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நற் சிந்தனைகள்

நண்பனின் உடலில் ஒரு பாகமாக இரு. அப்போதுதான் அவனுக்கு ஏற்படும் காயம் உனக்கும் வலிக்கும்.

கால் விரல் இல்லை என்பதற்காக கவலைப்படாதே. காலே இல்லாதவனைப் பார்த்து நீ ஆறுதல் அடைந்து கொள்.

இறைவனுக்கு அஞ்சுபவன் இரையாவதற்கும் அஞ்ச மாட்டான்

பறக்க நினைத்த பறவைகளுக்கு பாதைகள் அவசியமில்லை.

ஆயிரம் உறவுகள் ஒருமித்திருந்தாலும், வலியின் உச்சத்தில் வெளிவரும் வார்த்தை தாய் அல்லது தந்தைதான்.

பலர் உயர ஏணியாக இருந்தவர்கள் கூட உலகில் பரம ஏழையாக வாழ்கின்றனர்.

இன்பத்தில் பங்கெடுத்து துன்பத்தில் தூரச் செல்பவன் உறவைத் துண்டிப்பதே மேல்.

உழைப்புத்தான் கல்லையும் சிற்பமாக்குகின்றது.

அறிஞர்கள் என்போர் கூடுதலாகக் கேட்கிறார்கள் குறைவாக கதைக்கின்றார்கள்.

இலவசமாக கொடுக்கல் வாங்கல் செய்ய முடியுமான ஒரே நகை புன்னகைதான்.

பண்பில்லாத நண்பனை விட பண்புள்ள பகைவன் மேலானவன்.

*அப்துல் கபூர் பாத்திமா ஸிபா*
*தரம் - 10*
*மட்/ செம். அல்ஹம்றா வித்தியாலயம்,*
*செம்மண்ணோடை*

## அறிந்து கொள்ளுங்கள்

இலங்கையில் உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை - 10,502
இலங்கையின் மொத்த வணிக ஏற்றுமதிகள் - 959,519 மில்லியன் ரூபாய்
இன்றைய பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதி - பெணிக்னோ அதியூனோ
சர்வதேச மது ஒழிப்பு தினம் - ஒக்டோபர் 03
ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச விண்வெளி ஆண்டெனப் பிரகடனம் செய்த ஆண்டு - 1992
குருதியின் வகைகள் - A, B, AB, O
குடித்தொகைக் கல்வியின் தந்தை - ஜோன் கிராண்ட்
எகிப்து நாட்டின் சிறப்புப் பெயர் - நைல் நதியின் கொடை
இலங்கை தமிழரசுக்கட்சி நிறுவப்பட்ட ஆண்டு 1943 யூலை 03
அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் (UNHCR) நிறுவப்பட்ட ஆண்டு- 1950

*எஸ். அஜீபா*
*தரம் - 11*
*அல்/ அஷ்ரப் மகா வித்தியாலயம்*
*இறக்காமம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றாட வாழ்வில் அரபு மொழி

اللغة العربية

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

## اَلْحَالُ

### சென்ற இதழ் தொடர்ச்சி

يَدْخُلُ الْمُدِيْرُ الْمَكْتَبَ وَالطُّلَّابُ يَلْعَبُوْنَ فِيْ الْمَلْعَبِ ✓

மாணவர்கள் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் நிலையில் அதிபர் காரியாலயத்துக்குள் நுழைகிறார்.

يَدْخُلُ الْمُدِيْرُ الْمَكْتَبَ وَيَلْعَبُ الطُّلَّابُ فِيْ الْمَلْعَبِ ✗

குறிப்பு: اَلْجُمْلَةُ الإِسْمِيَّةُ என்பது பெயர்ச் சொல்லை ஆரம்பித்து முழுமை பெறும் வாக்கியமாகும்.

جَاءَ الطَّالِبُ وَفِيْ يَدِهِ كِتَابٌ

மாணவன் கையில் ஒரு புத்தகத்துடன் வந்தான்.

رَكِبَ اَلْمُسَافِرُ الْحَافِلَةَ وَعَلَى رَأْسِهِ سَلَّةٌ

தனது தலையில் ஒரு கூடையுடன் பஸ் வண்டியில் பயணி ஏறினான்.

பாத்திமா கையில் ஒரு குர்ஆன் பிரதியுடன் வகுப்புக்குள் நுழைந்தாள்.

دَخَلَتْ فَاطِمَةُ الصَّفَّ وَفِيْ يَدِهَا مُصْحَفٌ

சுருக்கமாகக் கூறின், ஒரு வாக்கியத்தில் فَاعِلٌ அல்லது مَفْعُوْلٌ بِهِ யின் இரண்டு செயல்கள் ஒரே நேரத்தில் நடப்பதை விளக்குவதே اَلْحَالُ ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## قَرَأَ الطَّالِبُ اَلْكِتَابَ جَالِسـاً

மாணவன் புத்தகத்தை உட்கார்ந்து கொண்டு வாசித்தான்.

இந்த உதாரணத்தை நோக்கும்போது மாணவன் எந்த நிலையில் வாசித்தான் என்பதனை விளக்குவதாக اَلْحَالُ அமையும்.

மேலுள்ள اَلْحَالُ என்ற இலக்கண விதியை உள்ளடக்கிய வசனத்தை பல வகையான اَلْحَالُ முறைகளில் எழுத முடியும்.

قَرَأَ الطَّالِبُ اَلْكِتَابَ يَجْلِسُ

قَرَأَ الطَّالِبُ اَلْكِتَابَ وَهُوَ يَجْلِسُ

قَرَأَ الطَّالِبُ الْكِتَابَ وَهُوَ جَالِسٌ

குழந்தை அழுதவாறு தூங்கியது.

نَامَ الطِّفْلُ بَاكِياً ✓

نَامَ الطِّفْلُ يَبْكِيْ ✓

نَامَ الطِّفْلُ وَهُوَ يَبْكِيْ ✓

نَامَ الطِّفْلُ وَهُوَ بَاكٍ ✓

எனது தந்தை பள்ளிவாசலுக்கு நடந்த வண்ணம் சென்றார்.


ذَهَبَ وَالِدِيْ إِلَى الْمَسْجِدِ مَاشِياً ✓

ذَهَبَ وَالِدِيْ إِلَى الْمَسْجِدِ وَهُوَ مَاشٍ ✓

ذَهَبَ وَالِدِيْ إِلَى الْمَسْجِدِ يَمْشِيْ ✓

ذَهَبَ وَالِدِيْ إِلَى الْمَسْجِدِ وَهُوَ يَمْشِيْ ✓

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## How much do you know?

**Assalamu alaikum dear friends,**

I thought of creating an awareness on 'food crisis' this September. Do you know what it is?

Allah created the earth, and all living beings on it. He created food for all of us. There is food in the sea, forest, and land. Food is one of the basic needs of living beings.

But today, food is being over wasted in some parts of the world, while some others don't have food at all.


Children in areas of food shortage, suffer malnutrition, and various other diseases.

## wHaT cAn WE dO ?

- Don't waste food.
- Eat with satisfaction, and thank Allah
- Don't buy excess food when not needed.
- Care for the poor, who have never tasted food
- Share your food with others.
- Make a home garden
- Gift your friends with crops
- Don't waste water



Any other idea?




SHARE THIS NEWS WITH YOUR FRIENDS!!

Help resolve food crisis.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Grammar is interesting!!!

Do you know when do we use the words "every" and "all"? We use

Every + **singular noun**

All + **plural noun / uncountable noun**

**Every**

Every **weekend** we go for shopping

Every **man** should be respected


Every **student** should study well.

**All**

All the **weekends** we go for shopping

All **men** should be respected

All **students** should study well



**Now try these questions, put 'every' or 'all' in the blanks**

1. I study ______ night
2. Ruzna helps ___________ people
3. I wake up early _____ morning
4. ____ animals are not wild
5. Sameer cleans his bike ______ day

## Your corner

# ISLAM

*What is Islam?*

Islam means, that Allah is one. He has no partner. He knows , sees and hears. And he is High on the Arsh in the Heaven. We must worship Him alone, and not do what He does not like us to do.

# ISLAM

*Were people born in islam?*

Everyone is born Muslim

*Some people say they are not Muslims ...why?*

Shaitan made them change to worship other than Allah

*What is the basic thing that will return people to Islam?*

To say (and believe) that "There is no true God who has the right to be worshipped alone but Allah and Muhammed (PBUH) is the messenger of Allah

**Mohamed Rafique Aysha Fahma**
**Grade 09**
**P/Fathima Muslim Girls College**
**Putlam**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IMPORTANCE OF WATER

Water is a valuable gift of nature. All the beings and plants need water for living. We require water for different purposes. We can live for a few days without food. But we can't live without water. Water plays an important role in our lives.

We need water for our daily activities like cooking, bathing, washing and drinking etc. In addition , water is a must for agricultural purposes.


There fore we have to manage water carefully. We allocate water to the environment according to the demand of the environment and should supply requirement for our agriculture industry, power generation and domestic works. So, the policymakers should pay greater attention to the over exploitation of fresh water. If we do so ,our mother land will be a beautiful and fruitful nation. So let's conserve this valuable resource for our future.

Z.A.ZAINUM ZANOFER, GRADE 10
AK/AL IRFAN LADIES COLLEGE,
POTTUVIL.

*Entries by post*

# HIGH BLOOD PRESSURE

High blood pressure is one of the commonest diseases all over the world. When people have high blood pressure or hyper tension, they are told by their doctors how their pressure can be brought back to normal and are prescribed medicines to reduce the elevated pressure. The aim of treating high blood pressure is to prevent or delay life-threatening heart attacks and strokes. If your blood pressure remains high the heart attack that would usually end your life in your eighties will kill you when you are in your fourtees or fiftees. Therefore it is necessary to keep your pressure under control. Often simple things like losing weight, giving up smoking, taking up meditation and regular exercise can bring elevated pressure back to normal.



**Fathima Fasha Fahmy**
**Muslim ladies College, Galle**

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays.
The best ones will be published insha Allah.
So write to me at

I learn every day

A 61/5,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

## 10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

### 10ம் தரம்

01. i. படத்தில் இருக்கும் ஓவியத்தின் பெயர் என்ன?



ii. இதனை வரைந்த ஓவியர் யார்?

iii. இந்த ஓவியர் வரைந்த இன்னோர் ஓவியத்தின் பெயரைத் தருக.

02. மறுமலர்ச்சிக் காலத்தில் விஞ்ஞானம் வளர்ச்சி யடைந்தது. விஞ்ஞான வளர்ச்சி தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i. வானியலின் தந்தை என்று அழைக்கப்பட்டவர்.

ii. செய்முறை விஞ்ஞானத்தின் தந்தை என்று அழைக்கப்பட்டவர்.

iii. ஈர்ப்பு விசையைக் கண்டுபிடித்தவர்.

iv. குருதிச் சுற்றோட்டத்தைக் கண்டுபிடித்தவர்.

03. அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதால் ஏற்பட்ட நன்மைகள் இரண்டை விளக்குக.

04. நாடுகாண் பயணங்களால் ஏற்பட்ட விளைவுகள் இரண்டை விளக்குக.

**விடைகள்**

01. i. மொனாலிசா

ii. லியானாடோ டாவின்சி

iii. இறுதி இராப்போசனம்

02. i. நிக்கலஸ் கொபர்நிகஸ்

ii. கலீலியோ கலிலி

iii. சேர் ஐசாக் நியூட்டன்

iv. வில்லியம் ஹார்வே

03. i. அறிவு வளர்ச்சியடைந்தது

அச்சியந்திரத்தை ஜேர்மனியரான ஜோஹன்னஸ் கூடன்பேர்க் கண்டுபிடித்தார். ஐரோப்பியர் சீனர்களிடமிருந்து அச்சிடும் முறையைக் கற்றனர். அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதால் மக்களது கல்வி அறிவு வளர்ச்சியடைந்தது. அச்சியந்திரத்தின் காரணமாக பல நூல்கள் வெளியாகின. சமய, விஞ்ஞான, கணித நூல்கள் பல வெளியாகின. இதன் காரணமாக மக்களது கல்வி அறிவு வளர்ந்தது. சிந்தனையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன.

ii. நாடுகாண் பயணங்கள் ஏற்பட்டன

1447இல் கூடன்பேர்க் அச்சியந்திரத்தைக் கண்டுபிடித்தார். இதன் காரணமாக நாடுகள் பற்றிய பல நூல்கள் வெளியாகின. இதனால் போத்துக்கல்லைச் சேர்ந்த பார்த்தலமியூ டயஸ், வஸ்கொடகாமா முதலியோர் நாடுகாண் பயணங்களில் ஈடுபட்டனர். வஸ்கொடகாமா 1498இல் இந்தியாவின் கள்ளிக் கோட்டையை அடைந்தார். அச்சியந்திரம் கண்டு பிடிக்கப்பட்டதனால் பல நூல்கள் எழுதப்பட்டன. அந்த நூல்களைப் படித்தவர்கள் புதிதாக ஏதாவது சாதிக்க வேண்டும் என்று விரும்பினார்கள். ஆகவே, அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டமை, நாடுகாண் பயனங்களுக்கு வழிகாட்டியாக அமைந்தது.

04. i. நாடுகளிடையே தொடர்பு அதிகரித்தது

நாடுகாண் பயணங்களுக்கு முன்பு உலக நாடுகளுக்கிடையே தொடர்புகள் மிகவும் குறைவாக இருந்தன. பாகியன், ஹியுங்சாங் முதலிய சிலரே வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்தார்கள். நாடுகாண் பயணங்களுக்குப் பின்பு ஐரோப்பியர் உலகின் பல நாடுகளுக்கும் செல்ல ஆரம்பித்தனர். போர்த்துக்கேயர் இலங்கைக்கும் ஒல்லாந்தர் இந்தோனேசியாவுக்கும் ஜப்பானியர் கியூபாவுக்கும் ஆங்கிலேயர் இந்தியாவுக்கும் சென்றனர். இவ்வாறு நாடுகாண் பயணங்கள் நாடுகளுக்கிடையே நெருக்கத்தை ஏற்படுத்தின.

ii. சர்வதேச வர்த்தகம் வளர்ச்சியடைந்தது

நாடுகாண் பயணங்களுக்கு முன்பு தரைப்பாதை வழியாகவே பெரும்பாலும் வர்த்தகப் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டன. வர்த்தகப் பொருட்களை மனிதர்களும் விலங்குகளும் சுமந்து சென்றன. நாடுகாண் பயணங்களுக்குப் பின்பே அதிகமான வர்த்தகப் பயிர்கள் கப்பல்கள் மூலம் கொண்டு செல்லப்பட்டன. இங்கிலாந்தில், லிவர்பூர் நகரத்தில் உள்ள நெசவுத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருளான பருத்தி இந்தியாவிலிருந்து அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டது. இத்தாலி, ஜேர்மனி போன்ற நாடுகளிலிருந்து பல கைத்தொழிற் பொருட்கள் ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கு கப்பல்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i பின்வரும் நாடுகளிடையே முதலாளித்துவ அணியில் இடம்பெறும் 3 நாடுகளைத் தருக.

(கனடா, நோர்வே, போலந்து, கிழக்கு ஜேர்மனி, பல்கேரியா, லக்சம்பேக்)

ii. A. 1947இல் உருவானது.

B. இது ஐக்கிய அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாக செயல்படுகின்றது.

C. பலஸ்தீன மக்களின் ஆதரவு இதற்கு உண்டு.

D. பெல்பர் அறிக்கையின்படி உருவானது.

E. முதலாளித்துவத்தை வளர்ப்பது இதன் நோக்க மாகும்.

F. சோவியத் ரஷ்யாவுக்கு இது எதிரானது.

மேற்குறிப்பிட்ட தகவல்களுள் இஸ்ரேல் தொடர்பான சரியான தகவல்களாக அமையும் நான்கினைக் குறிப்பிடுக.

iii. அமெரிக்க உளவுச் சேவையும் நேட்டோவும் எவ்வாறு ஐ.அமெரிக்கா வல்லரசாக மாற உதவின என்பதை விளக்குக.

iv. சோவியத் ரஷ்யா வல்லரசாக மாற உதவிய 3 காரணிகளை விளக்குக.

**விடைகள்**

i. கனடா, நோர்வே, லக்சம்பேக்

ii. A, D, E, F

iii. **அமெரிக்க உளவுச் சேவை**

ஐ. அமெரிக்க உளவுச் சேவை C.I.A என்று அழைக்கப்படுகின்றது. இச்சேவையில் 20,000க்கும் அதிகமானோர் பணி புரிகின்றனர். ஐ. அமெரிக்காவின் எதிரி நாடுகள் பற்றிய பல இரகசியத் தகவல்களை இவர்கள் தமது நாட்டு அரசாங்கத்திற்கு வழங்குகின்றனர். உதாரணமாக சோவியத் ரஷ்யாவிடம் எத்தனை அணுகுண்டுகள் உள்ளன, அவை எந்த இடத்தில் பாதுகாப்பாக உள்ளன. கடற்படையில் எத்தனை நீர்மூழ்கிக் கப்பல்கள் உள்ளன, எவ்வாறான யுத்தப் பயிற்சி அங்கு நடைபெறுகின்றது போன்ற தகவல்களை C.I.A வழங்குகின்றது. இதனால், ஐ. அமெரிக்காவால் எதிரி நாடுகளை இலகுவில் பலவீனப்படுத்த முடிகின்றது. 1982இல் சோவியத் ரஷ்யா வீழ்ச்சியடைந்தமைக்கு C.I.A வழங்கிய தகவல்கள் பெரிதும் பயன்பட்டன.

**நேட்டோ**

முதலாளித்துவ நாடுகள் ஏற்படுத்திக் கொண்ட இராணுவ அமைப்பே வடக்கு அத்திலாந்திக் நாடுகளின் பாதுகாப்பு ஒப்பந்தம் (NATO) ஆகும். முதலாளித்துவ நாடுகள் 1949.04.04இல் வொஷிங்டன் நகரில் கைச்சாத்திட்டு இந்த அமைப்பை ஏற்படுத்திக் கொண்டன. இந்த அமைப்பில் ஐ. அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, பிரான்ஸ் முதலிய வட அத்திலாந்திக் நாடுகள் அங்கம் பெறுகின்றன. இதன் தலைமை அலுவலகம் பிரான்ஸில் உள்ளது. இராணுவத்தையும் இராணுவ தொழிநுட்பத்தையும் அங்கத்துவ நாடுகளுக்கிடையேயே பரிமாறுதல், அங்கத்துவ நாடு தாக்கப்பட்டால் அனைத்து அங்கத்துவ நாடுகளும் அதற்கு எதிராக செயற்படுதல் என்பன இதன் முக்கிய நோக்கங்களாகும். இதன் தலைமைப் பதவி ஐ. அமெரிக்காவுக்குக் கிடைத்துள்ளது.

**சமூக உடமைப் புரட்சி**

உலகில் மோசமான நாடாக விளங்கிய ரஷ்யா பலமான நாடாக மாறியமைக்கு 1917இல் அங்கு நடந்த சமூக உடமைப் புரட்சியே முக்கிய காரணியாகும். சார் மன்னனின் மோசமான ஆட்சிக்கு எதிராக லெனின் தலைமையில் ஏற்பட்ட ரஷ்யப் புரட்சி, உலகில் அது வல்லரசாக எழுச்சிபெற வழிவகுத்தது. இப்புரட்சி 2ஆம் நிக்கலஸ் சார் மன்னனின் சர்வாதிகாரத்தையும் பிரபுக்களின் அதிக அதிகாரத்தையும் மதகுருமாரின் ஆடம்பர வாழ்க்கையையும் முடிவுக்கு கொண்டு வந்தது. லெனின் தலைமையில் முதலாவது பொதுவுடமை அரசாங்கம் ஏற்பட இப்புரட்சி வழிவகுத்தது.

**ஐந்து ஆண்டுகால திட்டங்கள்**

சோவியத் ரஷ்யா பொருளாதாரத்தில் எழுச்சியடைவதற்கு அங்கு நடைமுறைப்படுத்தப்பட்ட ஐந்து ஆண்டுகால திட்டங்கள் உதவின. லெனினுக்குப் பின்பு 1924இல் பதவிக்கு வந்த ஸ்டாலின் ஐந்து ஆண்டுகாலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தினார். அவரது முதலாவது ஐந்து ஆண்டுகாலத் திட்டம் 1928இல் ஆரம்பமானது. ஐந்து ஆண்டு காலத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஸ்டாலின் 'கோஸ்ப்ளன்' என்ற அரசாங்க ஆணைக்குழுவை ஏற்படுத்தினார். நாட்டின் கைத்தொழிலை 136 வீதமும் விவசாயத்தை 35 வீதமும் அதிகரிக்க திட்டமிடப்பட்டது.

**KGB உளவுச் சேவை**

சோவியத் ரஷ்யாவின் உளவுச் சேவையாக KGB விளங்குகின்றது. ஐக்கிய அமெரிக்காவினதும் ஏனைய முதலாளித்துவ நாடுகளினதும் இராணுவ இரகசியங்களையும் பாதுகாப்பு நடவடிக்கைகள் சம்பந்தமான நடவடிக்கைகளையும் உளவறிந்து அதன் மூலம் கிடைத்த தகவல்களை தமது நாட்டுக்கு வழங்குகின்றது. இச்சேவையில் ஈடுபடுவோர் பெரும் பணம் வழங்கி, முக்கிய தகவல்களைப் பெறுகின்றனர். சோவியத் ரஷ்யா பலமான நாடாக மாறுவதற்கு அதன் உளவுச் சேவையான KGB முக்கிய பங்கை வகித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புன்னகை நிகழ்த்தும் அதிசயம்



மௌலவி கே.ஏ. முஹம்மத் யூசுப் தாவூதி

அப்துல்லாஹ் இப்னு ஹாரிஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகிறார்கள்:

"அண்ணலாரைவிட அதிகம் புன்னகைப்பவரை நான் பார்த்ததில்லை." (ஷமாயிலுந் திர்மிதி)

ஜுரைர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகிறார்கள்:

"என்னை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பார்க்கும் பொழுதெல்லாம் புன்சிரிப்போடுதான் பார்ப்பார்கள்." (ஷமாயிலுத் திர்மிதி)

ஒரு முறை அண்ணலாரிடம் அவரது தோழர்கள் "நீங்களும் நகைச்சுவையோடு பேசுகிறீர்களே எனக் கேட்ட பொழுது "ஆம்; எனது நகைச்சுவை உண்மையை மட்டுமே தழுவியதாக இருக்கும்" என்றார்கள். (ஷமாயிலுத் திர்மிதி)

அல்குர்ஆன் கட்டளையிடுகிறது; "மக்களிடம் அழகிய முறையில் பேசுங்கள்."

ஜாபிர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகிறார்கள்: "நான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடன் நூற்றுக்கும் அதிகமான சபைகளில் கலந்து கொண்டிருக்கிறேன். அறியாமை காலத்து நிகழ்ச்சி களைத் தோழர்கள் பேசும்பொழுது நபியவர்கள் புன்சிரிப் போடு கேட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்திருக்கிறேன்." (அத்திர்மிதி)

ஏழ்மை, பட்டினி, பசி, அநீதி, அடக்குமுறை போன்றவற்றுக்கு மத்தியிலும்கூட நபியும் நபியின் குடும்பமும் முகமலர்ச்சியை, புன்சிரிப்பை ஒரு போதும் கைவிட்டதில்லை. இன்று ஐரோப்பியர்கள் அண்ணலாரின் இந்த நடைமுறையைக் கடைப் பிடித்தார்கள். வெற்றிக்கனியை எளிதாகப் பறித்து விட்டார்கள்.

ஐரோப்பாவின் பிரபல அறிஞர் சிட்ரின் கூறுகிறார்: "எனக்கு மனச் சோர்வு ஏற்படும் பொழுதெல்லாம் புன்சிரிப்பின் மூலம் புத்துணர்ச்சி பெறுகிறேன். மனச் சோர்வை விரட்டுகிறேன்."

அமெரிக்காவின் ஒரு நிறுவனத்தின் மேலாளர் தமது அலுவலகக் கூட்டமொன்றில் சக ஊழியர் களிடம் பேசும் பொழுது "ஒரு வாரத்திற்கு மட்டும் புன்சிரிப்போடு உங்கள் பணிகளை ஆற்றுங்கள். பிறகு உங்கள் பணி பளுவானதா, எளிதானதா எனக் கூறுங்கள்" என்றார். கடின உழைப்பு மட்டும் வெற்றியை உறுதி செய்துவிட முடியாது என்பதை மேற்குலகம் உறுதியாக நம்புகிறது.

நியூயோர்க்கில் ஒரு மருத்துவரது கிளினிக்கில் எப்பொழுதும் கூட்டம் நிரம்பி வழியும். அவர் மருந்து களைக் குறைவாகவே தருவார். ஆனால் அவரிடம் வரும் நோயாளிகள் அனைவரும் நலமடைந்து திரும் புகின்றார்கள். இவரது பெயர் Doctor Birdick. ஆனால் மக்கள் இவரைப் Doctor Smile புன்சிரிப்பு மருத்துவர் என்றே அழைப்பார்கள்.

Mr. Ravend எனும் அமெரிக்க அறிஞர் கூறுகிறார்: "நான் ஒரு முறை நோயுள்ள ஒரு பெண்ணைச் சந்திக்கச் சென்றேன். அங்கே ஒரு கூஜாவில் ஒரு ரோஜாச் செடி வைக்கப்பட்டிருந்தது. அப்பெண்ணிடம் இங்கு ரோஜாச் செடி வைக்கப்பட்டிருப்பது ஏன்? எனக் கேட்டேன். அப்பெண் கூறினாள். இந்த ரோஜாப் பூவை எனது மகள் இருட்டு அறையின் பக்கமாகத் திருப்புகிறாள். ஆனால் அந்த ரோஜாப் பூ வெளிச்சத்தின் பக்கமாகவே திரும்பி விடுகிறது. இப்பூவிற்கு இருளைப் பிடிப்பதில்லை. இது எனக் கொரு பாடத்தைத் தருகிறது. நாமும் வெளிச்சத்தைத் தேடித்தான் செல்ல வேண்டும். இருளை நோக்கி அல்ல. எவர் வெளிச்சத்தைத் தேடி மலர்ந்த முகத்தை நோக்கி பயணிப்பாரோ அவரே நிச்சயம் வெற்றி பெறுவார்."

பல இலட்சம் முதலீடு செய்தும் தொழில் செய்வது எப்படி என்ற பட்டப் படிப்பு படித்தும்கூட பல தொழில் நிறுவனங்கள் இழப்பை நோக்கிச் செல்வ தற்கான காரணம் அலுவலகத்தில் குறைந்த ஊதியத்தில் 'உர்ர் மூஞ்சி'யுடன் வரவேற்பாளர் நியமிக்கப்பட்டதே ஆகும்.

வெற்றியைத் தேடுவோர் அண்ணலாரின் இயல் பான நற்பண்புகளைப் பின்பற்றினால் வெற்றி உறுதி செய்யப்படும். அப்படிப் பின்பற்றுபவர்கள் முஸ்லிம் களாக இருந்தாலும் சரி; ஐரோப்பியர்களாக இருந் தாலும் சரி! யாராக இருந்தாலும் சரி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்கள் கனவுகளை நனவாக்குங்கள்

ஜே.எம். அஸீம் (நளீமி)

ஒலிம்பிக் கனவுகள் நனவானவர்களையும் கனவுகள் கலைந்தவர்களையும் நாம் இந்த ஒலிம்பிக்கில் கண்டு கொண்டோம். கனவுகளை நனவாக்க அவர்கள் மேற்கொண்ட கடுமையான பயிற்சிகளையும் முயற்சிகளையும் நாமறிவோம். கனவுகள் கலைந்தபோது அவர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதையும் நாம் கண்டோம். "தங்கள் கனவின் அழகின் மீது நம்பிக்கை வைப்பவர்களுக்கே எதிர்காலம் உரியது" என எலினார் ரூஸ்வெல்ட் குறிப்பிடுகிறார்.

மாணவர்களைப் பொறுத்தவரை மூன்றாம் தவணைதான் அவர்களது கனவுகளை நனவாக்க கடுமையாக உழைக்க வேண்டிய கட்டமாகும். பலர் தத்தமது கனவுகள் நனவாக உழைக்கின்ற போதும் பல விழுமியங்களை (Values) மறந்து விடுகின்றனர். ஆனால், அத்தகைய விழுமியங்கள் தான் நிலையான வெற்றியைப் பெற்றுத்தரவல்லன என்பதை அவர்கள் அறியாதுள்ளனர் அல்லது மறந்து விடுகின்றனர். மாணவர்கள் மாத்திரமல்லாமல் அனைவரும் அவசியம் கடைபிடிக்க வேண்டிய இத்தகைய விழுமியங்களின் அடிப்படையில்தான் நிலையான வெற்றி தங்கியுள்ளது என்பதை உறுதியாக நம்பும் நாம், திடமாக அவற்றைக் கடைபிடிக்க முயற்சிக்க வேண்டும். சாதனைகளுக்குப் பின்னாலுள்ள இத்தகைய உண்மைகளை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

### மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள்

நீங்கள் வெற்றியாளராகத் திகழ வேண்டுமென்றால் நீங்கள் மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள். வெற்றியாளர்கள் தனியாக எதையும் சாதிக்க முடியாது என்பதை அனுபவத்தில் அறிந்து கொள்கிறார்கள். அவர்கள் பெறும் பதக்கங்களுக்குப் பின்னால் பலர் இருப்பதை அறிந்துள்ளனர். அவர்கள் ஆசிரியர்களாக, பெற்றோராக, பிள்ளைகளாக, நண்பர்களாக, பயிற்றுவிப்பாளர்களாக என பல பாத்திரங்களில் இருக்கலாம். அவர்கள் இல்லாமல் அந்த வெற்றி சாத்தியமாயிருக்காது என்பதை அவர்கள் நன்கு அறிந்தே வைத்துள்ளனர்.

"சோக்ரடீஸ் பிளேட்டோவுக்குக் கற்றுக் கொடுத்தார். பிளேட்டோ அரிஸ்டோட்டிலுக்குக் கற்றுக் கொடுத்தார். அரிஸ்டோட்டில் மாபெரும் வீரன் அலெக்ஸான்டருக்குக் கற்றுத் தந்தார். ஆக, ஞானம் என்பது பின்வருபவர்களுக்குத் தரப்படாமல் இருந்தால் அது மறைந்தே போயிருக்கும். நமது மாபெரும் பொறுப்பே எதிர்கால தலைமுறையினர் பெருமையோடு சொல்லிக் கொள்ளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிச் சுவடொன்றை விட்டுச் செல்வதே ஆகும்."
-ஷிவ் கெரா

இன்று மாணவர்களிடமும் மற்றவர்களிடமும் பிறருக்கு எதையும் சொல்லிக் கொடுக்காத குறை பரவலாகப் பரவி வருகின்றது. கொடுப்பதால் எதுவும் குறைவதில்லை என்ற பாடம் பாடசாலையில் எத்தனை முறை கற்பிக்கப்பட்டாலும் அவர்கள் கண்டுகொள்வதே இல்லை.

### கற்றுக் கொண்டே இருங்கள்

ஒலிம்பிக்கில் சாதனை படைத்தவர்கள் வெறுமனே அயராத முயற்சியால் மாத்திரம் அத்தகைய சாதனைகளை சாத்தியமாக்கிவிட முடியாது என்பதை அறிந்தே வைத்துள்ளனர். வெற்றிக்காக அவர்கள் கையாள்கின்ற ஒவ்வொரு நுணுக்கமுமே அவர்களை வெற்றியின் பாதையில் அழைத்துச் செல்கின்றது என்பதால்தான் ஒவ்வொரு நுணுக்கத்தையும் கற்றுக் கொள்கின்றனர். இவர்களது பயிற்சியாளர்கள் இவற்றை இவர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்றனர். எனவே, தொடர்ந்து கற்றுக் கொண்டேயிருப்பதுதான் வெற்றிக்கான வழி.

### தோற்றுவிடுவேனோ என்ற அச்சம்

பலர் தமது கனவுகளை நனவாக்க பிழையான வழிமுறைகளையும் நடைமுறைகளையும் தேடுவர். நான் தோற்றுவிடுவேனோ என்ற அச்சம்தான் இத்தகைய பிழையான செயற்பாடுகளுக்கு அவர்களைத் தூண்டுகிறது. தன்னம்பிக்கை, விடாமுயற்சி என்பன இல்லாமையும் தோல்விகளை ஏற்றுக் கொள்ளத் தயாரில்லாத மனோநிலையுமே இதற்குக் காரணமாகும். தோற்றுவிடுவேனோ என்ற பயம் நற்பண்புகளை இழக்கக் காரணமாகிவிடும். வாழ்வின் விழுமியங்கள் தவறவிடப்படவும் இத்தகைய பிரமையான பீதியே காரணமாகிறது.

போட்டிகளின்போது எதிர் போட்டியாளருக்கு என்ன நடந்தாலும் நாம் கண்டுகொள்வதே இல்லை. ஒலிம்பிக்கில் லோரன்ஸ் லெமியக்ஸ் படகுப் போட்டியின்போது சிக்கலில் மாட்டிக் கொண்ட தனது சக போட்டியாளருக்கு உதவுவதற்காக தனது படகை நிறுத்தி உதவினார். இதனால் அவர் போட்டியில் வெற்றி பெறவில்லை. ஆனால் ஒலிம்பிக்கை விட சிறந்த கௌரவமும் மக்கள் வாழ்த்தும் அவரை வரவேற்றன. பிறருக்கு உதவுவதால் தனது வெற்றி பறிபோய் விடும் என்று அவர் நினைத்திருந்தால்...!?

### அதீத எச்சரிக்கை

தோல்வி பற்றிய பயம் மாணவர்களை வாட்டி எடுக்கும் காலம்தான் ஆண்டிறுதிப் பரீட்சை, க.பொ.த (சா.த) பரீட்சை என்பன. மாணவர்கள் தயாரில்லாத நிலை இத்தகைய பயத்திற்குக் காரணமாக அமைவதுண்டு. தேவையற்ற அதீத எச்சரிக்கைகூட இத்தகைய பயம் உருவாகக் காரணமாக அமைந்து விடலாம். அதீத எச்சரிக்கை எனும்போது வீணாக அதிக கற்பனை செய்து இவ்வாறு இவ்வாறு எல்லாம் நடந்துவிடுமோ என்று நினைத்து எச்சரிக்கையாக இருப்பதாக எண்ணி மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்வது, பயப்படுவது என்பவற்றைக் குறிக்கும்.

ஆபிரகாம் லிங்கன் தனது மகனின் பாடசாலையின் தலைமை ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில், "அவனுக்கு தோல்வியை ஏற்றுக் கொள்ளவும் வெற்றியை அனுபவிக்கவும் கற்றுக் கொடுங்கள்" என குறிப்பிட்டுள்ளார்.

### தோல்வியின்போது தளர்ந்து விடாதீர்கள்

தோல்வி என்பது வெற்றி தவறவிடப்பட்ட ஒரு சந்தர்ப்பமே. அது நிரந்தரமானதல்ல. எனவே, தோல்வியின்போது கவனமாக, நிதானமாக நடந்து கொள்ளுங்கள். தோல்வியில் விரக்தியடைவதோ கவலையடைந்து மனம் தளர்ந்து போவதோ நிதானமிழந்து வெற்றி பெற்றவரை வெறியோடு நோக்குவதோ உரிய பயனைத் தராது என்பதை மனதில் இருத்துங்கள். அதுவே நாளை நீங்கள் வெற்றி பெற்றவராகுவதற்கு உதவும்.

### வெற்றியின்போது நிதானம் இழக்காதீர்கள்

வெற்றி பெற்றால் நடந்துகொள்ள வேண்டிய பண்பான முறைகளில் நடந்து கொள்ளுங்கள். ரமழான் மாதத்தில் இடம்பெற்ற பத்ர் யுத்தம் வெற்றியின்போது நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை எமக்குக் கற்றுத் தருகிறது. மிகப் பெரும் போராட்டத்தின் வெற்றியின்போது அவர்கள் இறுமாப்புக் கொள்ளவில்லை. மாறாக, இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள். பண்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து கொண்டார்கள். ஆனால், இதற்கு மாற்ற மாக உஹுத் போரின்போது குறைஷிக் காபிர்கள் நடந்து கொண்டனர். யுத்தத்தில் கொல்லப்பட்ட வர்களின் உடல்களை சிதைத்தனர்.

சராசரித்தனத்தை தாண்டி உச்சத்தைத் தொட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு

கனவை நனவாக்கியவர்களிடம் சராசரி மனிதர்களிடம் காணப்படுவது போன்ற சாதாரண கனவுகள் காணப்படாது. அவர்கள் எப்போதும் வாழ்வின் உச்சத்தையே கனவு காண்பார்கள். சராசரி மனிதர்களிடம் காணப்படுவது போன்ற சாதாரண ஆசைகள், எதிர்பார்ப்புகளைத் தாண்டிய மிகை யான எதிர்பார்ப்புகளே அவர்களிடம் மிகைத்தி ருக்கும். இத்தகைய கனவுகள்தான் எம்மிடமும் எப்போதும் பசுமையாகக் காணப்பட வேண்டும். சிறுவயதில், "உங்கள் எதிர்காலக் கனவு என்ன?" என்று கேட்டபோது, "அமெரிக்க ஜனாதிபதி யாவது" எனக் கூறிய ஒபாமா நிஜமாகவே பின்னாளில் அமெரிக்க ஜனாதிபதியானார். இவ்வாறான உயர்ந்த கனவுகள் கருக்கொண்ட வர்கள்தான் சாதிக்க முடியும்.

யோசனைகளைச் செயற்படுத்தினால் தடைகள் தவிடுபொடி

வாழ்வில் தடைகளில் தடுக்கி விழுபவர்கள் மீண்டும் எழுவதற்குத் தயங்குவர். ஆனால் அவர் களுக்குப் புதிது புதிதாகத் தோன்றும் யோசனை களைச் செயற்படுத்தும்போது தடைகள் தவிடு பொடியாகிவிடும் என்பதை அறியாதுள்ளனர். உங்களுக்குத் தோன்றும் அபார யோசனைகள் உங்கள் கனவுகளின் கருக்கள். அவை உங்களை நீங்கள் நாடும் இடத்திற்கு அழைத்துச் செல்லும். எக்கணமும் தயங்காது, தளராது நீங்கள் பயணித்தால் உங்கள் இலட்சியக் கனவு இனிதே ஈடேறும், இன்ஷா அல்லாஹ்.

# நல்ல ஒழுக்கம் என்றால் என்ன?

ஹஸனுல் பஸரி (ரஹ்மத்துல்லாஹி அலைஹி) அவர்கள் கூறுகிறார்கள்:

"முக மலர்ச்சி, மனதில் எதுவும் இல்லாமல் தாராள மனதோடு செலவு செய்யும் குணம், யாருக்கும் எவ்வகையிலும் தொந்தரவு தராமல் இருப்பது."

வாஸிதி (ரஹ்மத்துல்லாஹி அலைஹி) கூறுகி றார்கள்:

"வசதியாக இருந்தாலும் எல்லா நிலை களிலும் இறைவனுடைய படைப்பினங்களை திருப்தியோடு வைத்துக் கொள்வது."

ஸஹல் தஸ்ரீ (ரஹ்மதுல்லாஹி அலைஹி) கூறுவதாவது:

"ஒழுக்கங்களிலேயே கீழ்தரத்தில் இருப்பது சகிப்புத்தன்மை, பழிவாங்காமல் இருக்கும் குணம், அநீதி இழைத்தவரையும் மன்னித்து கருணை காட்டும் பண்பு, அவருக்காக பாவமன்னிப்பு கோருவது, அவர் மீது கரிசனை காட்டுவது."

இன்னும் சிலர் "மக்களோடு நெருக்கி வாழ்வது, மக்களோடான தொடர்புகளிலும் கொடுக்கல் வாங்கல்களிலும் நடவடிக்கைகளிலும் பற்றில் லாமல் இருப்பது" எனவும் ஒழுக்கத்திற்கு விளக்கம் கூறியிருக்கிறார்கள்.

உயர்ந்த ஒழுக்கத்தின் மீது அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நிலை கொண்டிருந்தார்கள். அண்ணலாரைப் போல் யாரால் திகழ முடியும்? ஆயினும் அண்ணலாரைப் பின்பற்றி வாழ முயற்சிக்க வேண்டும். அண்ணலாரின் பாதை அல்லவா அது? இந்த விஷயத்தை நம்முடைய மனதில் கவனமாக நாம் பதித்துக் கொண்டால், நல் லொழுக்கம் என்கின்ற மாபெரும் விஷயம் நமக்கும் கைகூடி வரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவின் புதிய ஜனாதிபதி



இந்தியாவின் பதின்நான்காவது ஜனாதிபதியாக பிரணாப் முகர்ஜி 2012 ஜூலையில் தெரிவு செய்யப்பட்டார். 1933இல் பிறந்த இவர் 1969 இல் பிரதமர் இந்திரா காந்தி தலைமையிலான தேசிய காங்கிரஸ் கட்சியினூடாக அரசியலுக்குள் பிரவேசித்தார். இவர் UPA கட்சி சார்பாக ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டிருந்தார். இவர் நீதியமைச்சர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் லோக்சபா தலைவர் ஆகிய பதவிகளை வகித்தவர். உலகின் மிகப் பெரும் ஜனாதிபதி மாளிகையாக விளங்குவது 'ராஷ்டிரபதி பவன்' எனப்படும் இந்தியாவின் ஜனாதிபதி மாளிகையே ஆகும்.

# World Today



திரு. பீ. உமா சங்கர்,
B.Com (Jaf), M.Com (Kelaniya) (R) Spl.Trd.Com, NDBF, Sri Lanka Technical College - Colombo

## திவி நெகும அபிவிருத்தி திணைக்களம்




இலங்கை சமுர்த்தி அதிகார சபை உட்பட ஐந்து நிறுவனங்களை ஒன்றிணைத்து அவற்றின் பணியாளர்களுக்கு ஓய்வூதியத்தினை வழங்கி அம் மனித வளங்களை தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்து கொள்ளும் பொருட்டு 'திவி நெகும அபிவிருத்தி திணைக்களம்' உருவாக்கப்படவுள்ளது. இதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

## மாகாண சபைத் தேர்தல் 2012



இலங்கையின் வடமத்திய மாகாணம் (அநுராதபுரம், பொலன்னறுவை), கிழக்கு மாகாணம் (திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை), சப்ரகமுவ மாகாணம் (கேகாலை, இரத்தினபுரி) ஆகியவற்றுக்கான மாகாண சபைத் தேர்தல் 2012 செப்டெம்பர் 8இல் நடைபெறவுள்ளது.





## லண்டன் ஒலிம்பிக் 2012

1908, 1948, 2012 ஆகிய மூன்று தடவைகள் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றதன் காரணமாக கூடிய தடவைகள் ஒலிம்பிக் போட்டிகளை நடத்திய முதலாவது நாடு எனும் பெருமையை இங்கிலாந்து பெற்றுக் கொண்டது. மேலும் கூடியளவு நாட்கள் (188) ஒலிம்பிக் போட்டியை நடத்திய நாடு எனும் பெருமையை 1908 லண்டன் ஒலிம்பிக் பெற்றிருந்தது.

நவீன ஒலிம்பிக் தொடரில் 30வது ஒலிம்பிக் போட்டிகள் 2012 ஜூலை 27 தொடக்கம் ஆகஸ்ட் 12 வரை நடைபெற்றதுடன், பரா ஒலிம்பிக் போட்டிகள் ஆகஸ்ட் 29 தொடக்கம் செப்டெம்பர் 9 வரையான 28 நாட்கள் நடைபெறுகின்றன. இப்போட்டியில் 204 நாடுகள், 105,000 போட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாளர்கள், 36 வகையான போட்டிகளில் 302 போட்டிகள் நடைபெற்றன. இப் போட்டிகளுக் கான மொத்த செலவினம் 9.3 பில்லியன் ஸ்ரேலிங் பவுன் என மதிப்பிடப்பட்டிருந்தது.

சர்வதேச ஒலிம்பிக் குழு தலைவர் ரெக்ஸ் ரொகே ஆவார். லண்டன் ஒலிம்பிக் குழு தலைவர் செஸ்டியன் கோ பிரடிவ். லண்டன் ஒலிம்பிக் விளையாட்டு விழாவின் ஆரம்ப விழா ஐல்ஸ் ஒஃப் வொன்டர் (அதிசயத் தீவுகள்) எனும் பெயரில் நடைபெற்றது. லண்டன் ஒலிம்பிக் போட்டிகளுக்கு இலங்கை சார்பாக ஏழு வீர வீராங்கனைகள் பங்கு பற்றினர், பரா ஒலிம்பிக் போட்டிகளிலும் ஏழு வீர வீராங்கனைகள் பங்குபற்றுகின்றனர்.

இவ் 30வது ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்கா 46 தங்கப் பதக்கங்கள், 29 வெள்ளிப் பதக்கங்கள், 29 வெண்கலப் பதக்கங்கள் உள்ளடங்கலாக 104 பதக்கங்களைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றது.

## டெசோ (TESO) அமைப்பு

2012 ஆகஸ்ட் முற்பகுதியில் டெசோ அமைப்பின் மாநாடு இந்தியாவில் நடைபெற்றது. இவ் டெசோ அமைப்பின் விரிவாக்கம் Tamil Eelam Supporters Organization (TESO) ஆகும். இது 1985 மே 13ம் திகதி டாக்டர் கலைஞர் கருணாநிதியை தலை வராகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இதன் உறுப்பினர்களாக கே. வீரமணி, நெடுமாறன் ஆகி யோர் விளங்குகின்றனர்.



# உயிரோட்டமான வாசிப்பு (Effective Reading)



உள்ளம், மனம் என்பவற்றைப் பயன்படுத்தி சிறப்பான முறையில் 'வாசிப்பதையே உயிரோட்ட வாசிப்பு' என்பர். உயிரோட்டமாக வாசிப்பதற்கு பின்வரும் நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும்.

### I. Survery- கண்ணோட்டம்

ஒரு விடயத்தை வாசிக்க முன், இதனைப் படிப்பதன் நோக்கம் என்ன? படிப்பதனால் என்ன பயன்? இதில் உள்ள முக்கிய சொற்கள், விடயங்கள் யாவை? போன்ற கேள்விகளுக்கு விடைகளை மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

### II. Question- வினாக்கள்

நாம் வாசிக்கும் பந்தியில் இருந்து முக்கியமான விடயங்கள் விடையாக வரக்கூடியவாறு பல வினாக் களை எழுப்ப வேண்டும். இதன் மூலம் மனதில் ஆழ் பகுதியில் அவை பதிந்து விடும். மேலும் பந்தியை வாசிப்பதன் மூலம் இத்தகவல்கள் நீண்டகால ஞாப கத்தில் சேமிக்கப்பட்டு விடும்.

### III. Read- வாசிப்பு

வாசிப்பு என்பது வெறுமனே கண்ணால் பார்ப்பது மட்டுமல்ல. உயிரோட்டமான வாசிப்பு என்பது உணர்ச்சிபூர்வமாக வாசிப்பதுடன் அது சம்பந்தமாகக் கேட்கும் கேள்விகளுக்கு விடையளிக்கக் கூடியவாறு இருத்தல் அவசியம். நாம் வாசிக்கும் முன் அது சம்பந் தமான அட்டவணைகள், வரைபு என்பனவற்றை பதிய வைத்த பிறகே வாசிக்க வேண்டும்.

### IV. Recite- நினைவூட்டல்

ஒரு விடயத்தை வாசித்துக் கொண்டிருக்கும்போது அதை இடை நடுவில் நிறுத்திவிட்டு அது சம்பந்தமான தலைப்புக்கள், உப தலைப்புக்கள், அட்டவணைகள், வரைபுகள் என்பவற்றை நினைவூட்டல் வேண்டும்.

### V. Review- மீட்டுதல்

வாசிக்கப்பட்டுள்ள விடயம் எவ்வளவு சரியாக கூறப்பட்டுள்ளது என்பதை மீட்டிப் பார்த்தல். மீண்டும் வாசிப்பதன் மூலமாக ஏற்கனவே வாசிக்கும் போது விடுபட்ட விடயங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

எம்.எச். முஹம்மட் ஹிராஸ்,
4ம் வருடம்
மன்பஉல் ஹைறாத் அ.க, அக்கரைப்பற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியும் இலக்கியமும்

ஆசிரியர்: மஸ்ரா நிசாம்தீன் - BA (Hons) PGDE

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

மாணவர்களே!

க.பொ.த (சா/த) பரீட்சையில் பகுதி II ல் 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆம் வினாக்களில் ஏதாவது ஒரு வினாவுக்கும் விடை தருக என்ற அறிவுறுத்தலுக்கமைய நீங்கள் விடை எழுத வேண்டுமென்பது நீங்கள் அறிந்த விடயம்.

03,04,05,06,07 ஆம் வினாக்களாக வரும் மாதிரி வினாக்களும் அதற்கான விடைகளும் இனிவருகின்ற அகரம் இதழில் தொடர்ந்து வரும், இன்ஷா அல்லாஹ். அவற்றை சேகரித்துக் கற்றுப் பயன் பெறுங்கள்.

**வினா:-** நாம் சொல்லுகின்ற சொற்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்றும் எவ்வாறு இருக்கக் கூடாது என்றும் வள்ளுவர் திருக்குறள் மூலம் கூறுகின்றவற்றை எடுத்து விளக்குக.

**விடை:-** திருவள்ளுவர் 'அமைச்சியலில்' அமைச்சு நடத்துவதற்கு அமைச்சரால் கடைபிடிக்க வேண்டிய பண்புகளுள் 'சொல் வன்மை' 'பயனில் சொல்லாமை' பண்புகளை எடுத்துரைக்கிறார். அமைச்சருக்குரிய பண்பாக வள்ளுவர் கூறுகின்ற போதும் அனைத்து மக்களுக்கும் வேண்டப்படும் விடயமாகவே இதனைக் கூறல் பொருத்தமுடையது.

திருவள்ளுவர் சொல்வன்மை பற்றிக் கூறும் போது,

"சொல்லும் சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை
வெல்லும் சொல் இன்மையறிந்து"

என்று கூறுகின்றார். நாம் சொல்லக் கருதிய சொல்லை பிறிதொரு சொல்லால் வெல்லப்படாமலிருத்தலை அறிந்தே அச்சொல்லை சொல்ல வேண்டும் என்கிறார்.

வள்ளுவர் பிறரால் ஏற்றுக் கொள்ளப்படும் சிறந்த சொற்களை சொல்ல வேண்டும் என்கிறார். பொருட்செறிவும் இனிமையும் நயமும் மென்மையும் கொண்ட சொற்கள் பிறரால் மறுக்கப்படாமல் பேசுபவனுக்கு வெற்றியை, ஆதரவை தரவல்லது என்பது வள்ளுவர் பெருந்தகையின் மொழியாகும்.

மேலும், வள்ளுவர் இவ்வாறான பேச்சு உறுதியானதாக தெளிவானதாக அமையும், அமைய வேண்டுமெனவும் வழிகாட்டுகிறார்.

"சொல் வல்லன் சோர்விலன் அஞ்சானவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிது"

என்று சொல்வன்மை கொண்டவனது பண்பை எடுத்துரைக்கிறார். சோர்வு இல்லாதவனாகவும் சொன்ன சொல்லுக்கு அஞ்சாதவனாகவும் இருப்பது வெற்றியைத் தரும். அவ்வாறு பேசும் பண்பைக் கொண்டவனை எவரும் வெல்ல முடியாது என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

சொல்வன்மையுடையவராக இருத்தல் பற்றி மட்டுமன்றி பயனற்றவற்றை பேசாதவனாகவும் இருக்க வேண்டுமென வள்ளுவர் விரும்புகிறார்.

வள்ளுவர் 'இல்லறவியல்' 'பயனில் சொல்லாமை' எனும் அதிகாரத்தில் இல்லற வாழ்வில் இன்சொல்லின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது நோக்கத்தக்கது.

"பொருள் தீர்ந்த பொச்சாந்துக் சொல்லார்
மருள் தீர்ந்த மாசிறு காட்சியவர்"

என்று "மயக்கத்திலிருந்து தெளிந்த தூய அறிவினை உடையவர்கள் பயனற்ற சொற்களை மறந்தும் சொல்ல மாட்டார்கள்" என்பதை வலியுறுத்துகிறார்.

மனிதன் அறிவுள்ளவனாக செயற்பட வேண்டும். அறிவு எம்மில் இருப்பதற்கு எமது பேச்சு எடுத்துக்காட்டாகும். பயனற்றவற்றைப் பேசுவதால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கும் பிறருக்கும் தீங்கே ஏற்படும். மறந்தும் கூட பயனற்றதை பேசக்கூடாதென்பது வள்ளுவர் கருத்தாகும்.

பயனற்ற சொற்கள் பேசுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள் பயனுள்ளதை பேசுங்கள் என்பது,


"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க சொல்லின்சொல்" எனும் குறள் மூலம் புலனாகிறது.

மனிதன் பொய், புறம், பழி சொல், வன்சொல், அவதூறு, வீண் பேச்சு போன்ற சொற்களைத் தவிர்த்தல் மிக முக்கியம் அப்படி பயனிலாச் சொற்களை பேசாதிருக்கும்போது எம்மில் இனிய சொற்களே மலரும். அச்சொற்களே ஆரோக்கிய மான சமூகத்துக்கு உகந்தது என்பது திருவள்ளுவரின் மேன்மையான கருத்தாகும்.

இவ்வாறே திருவள்ளுவர் எமது சொற்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்றும் எவ்வாறு இருக்கக் கூடாது என்றும் சிறப்பாய் புலப்படுத்து கிறார்.

மீண்டும் புதிய வினா விடையுடன் சந்திப்போம், இன்ஷா அல்லாஹ்.

# இலக்குகளை நிர்ணயித்தல்



வாழ்வில் முன்னேற வேண்டும், நன்றாக வாழ வேண்டும் என்றெல்லாம் இலக்குகளை நிர்ணயித்து விட்டு சோம்பித் திரிந்து, நேரத்தை வீணடித்து வாழ்க்கைத் தண்டவாளத்திலிருந்து தடம்புரண்டோர் பலரைப் பார்க்கிறோம்.

இலக்குகளை நோக்கி அம்பெறியும்போது எறும்புக்கடிகளால் இலக்குகளைக் கோட்டை விடுகிறவர்களும் உண்டு. திசை திரும்பாத செயற்பாடும் தொடரான உழைப்புமே இலக்குகளின் இயல்புகள் என்று கூடச் சொல்லலாம்.

உண்மையில், இலக்குகளை நிர்ணயிக்கும் பாதையில் துணிவும் தன்னம்பிக்கையும் பாரிய பங்களிப்பைச் செலுத்துகின்றன. "துணிகரமான தொடக்கம் பாதி வெற்றி" என்று ஒரு பிரெஞ்சுப் பழமொழி உண்டு. ஒவ்வொரு மனிதனும் நம்பிக்கையின் அடிப்படையில்தான் வாழ்கிறான். ஆனால், நாம்தான் அந்த நம்பிக்கையை திறமைக்கும் தகுதிக்கும் ஏற்றால் போல் வளர்த்துக் கொள்ள வேண்டும். இலக்குகளின் அம்புகள் நம்பிக்கை மனையில்தான் எய்தப்படுகின்றன. மனிதனின் நம்பிக்கை அதிகரித்து துளிர் விடும்போது அங்கே அச்சம் விலகுகிறது; இலக்குகள் நிறைவேறுகின்றன.

இலக்குகள்; இவை எத்தனை சிறியதாக இருந்தாலும் பரவாயில்லை, நாம் ஒரு அடி எடுத்து வைத்தால் பல கதவுகள் எமக்காக திறந்து கொடுக்கும். முயற்சிதான் பாராட்டுக்குரியது. நாம் அடையும் பொருள் புகழைத் தருவதில்லை. அதற்கான முயற்சிதான் புகழைத் தருகிறது. நாம் பந்தயத்தின் முடிவில் அடையும் கோப்பையை யாரும் பாராட்டுவதில்லை. ஓடி அடைந்த வேகத்தை விட வெற்றி பெற முயற்சி செய்த மனத் துணிவுதான் பாராட்டப்படுகிறது.


இலக்குகளுக்கு உயிரூட்ட தளராத இதயம் வேண்டும். வந்த தடை எதுவென்றாலும் வாடி நின்றால் தாண்ட முடிவதில்லை. மலை இடிந்து விழுந்தாலும் உன் இதயம் சிறிதேனும் மலைக்கக் கூடாது. உண்மையான நம்பிக்கை இருந்தால் மலையைக் கூட அசைத்து விடலாம். உணர்ச்சிகளுக்கு அடிமையானால் இலக்குகள் ஊனமாகி விடும். உணர்ச்சிகள் சாதிப்பதை விட பொறுமையும் காலமுமே அதிகமாய் சாதிக்கின்றன.

எல்லாம் போய் விட்டது என்று சோர்ந்து போய் விடாதீர்கள். எந்த மனிதனாலும் வெல்ல முடியாத மனவலிமை இருக்கின்றது. அதை மூலதனமாகக் கொண்டு உழையுங்கள். இலக்குகளை இலகுவாக எய்தலாம். எவ் இலக்குகளானாலும் அதனை நாம் எம் மனதோடு ஒன்றிச் செய்வோமேயானால் வெற்றிக் குடை தானாக புடை சூழும்.

பாத்திமா ஹுமைதா ஏ. கப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எவ்வாறு நேரத்தை முகாமைத்துவம் செய்யலாம்?

ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)

நீண்டகால, குறுகிய கால இலக்குகள் தெளிவாக இருக்கும்போதுதான் நேரத்தை சரியாக, சிக்கனமாக முகாமைத்தும் செய்ய முடியும். அந்தவகையில் உங்களுடைய இலக்குகளைத் தெளிவாக வகுத்துக் கொள்ளுங்கள். பின்னர் அதை நோக்கிப் பயணிக்கும் பாதையில் எதிர்ப்படும் வேலைகளை நிறைவேற்ற நேரத்தைத் திட்டமிடுங்கள். பின்வருமாறு அதனைத் திட்டமிடலாம்:

1. ஒரு தவணையில் செய்யவேண்டிய வேலைகளை மேலோட்டமாக அவதானியுங்கள். முக்கியமான வேலைகளைக் குறித்துக் கொள்வதுடன் அது எந்தத் திகதிகளில் இடம்பெறும் என்பதையும் குறித்துக் கொள்ளுங்கள்.

பரீட்சை, விளையாட்டுப் போட்டி மற்றும் வேறு போட்டி நிகழ்ச்சிகள் போன்றவற்றை உதாரணமாகக் கூறலாம். இவற்றை அறிந்து கொள்வதானது முற்கூட்டியே திட்டமிடல்களை வகுப்பதற்குப் பெரிதும் பங்காற்றுகிறது.

2. வாராந்த நாட்காட்டி (Weakly calendar) ஒன்றைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.

- பாடசாலைக்குச் செல்லும் நேரம்
- சுய கற்றலுக்கான நேரம்
- பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறும் நேரம்
- சாப்பாடு, தூக்கம், உடற் பயிற்சிக்கான நேரம்
- மார்க்க விவகாரங்களில் பங்கெடுப்பதற்கான நேரம் (குர்ஆன், ஹதீஸ் விளக்க வகுப்புக்களில் கலந்து கொள்ளல்)
- குடும்ப, சமூக விவகாரங்களில் பங்கெடுக்கும் நேரம் போன்ற முக்கியமான அம்சங்கள் இந்த Weakly calendar இல் உள்ளடங்கும்.
- சமூக வேலைகளுக்கான நேரம் (சிரமதானம்) போன்ற விடயங்களைக் குறிப்பிடலாம்.

ஓய்வு மற்றும் பொழுது போக்குக்கான நேரம்

இதன்போது இரு விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும். ஒன்று, எவ்வளவு நேரம் தேவை என்பது; மற்றையது எப்போது ஆரம்பித்து எப்போது முடிவுறுகிறது என்பது.

ஒரு வாரத்தில் ஒவ்வொரு நாளும் எத்தனை மணித்தியாலங்கள் சுயகற்றலுக்கு ஒதுக்க வேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொள்வது சிறந்தது. இன்னும் Calendar தயாரிக்கும்போது சில விடயங்கள் நெகிழ்ச்சிக்குட்படக்கூடியதாகவும் இன்னும் சில விடயங்கள் நெகிழ்ச்சிக்குட்படாததாகவும் அமைய வேண்டும்.

உதாரணமாக, சாப்பிடுதல், பிரத்தியேக வகுப்புக்குச் செல்லல், இபாதத் மற்றும் மார்க்க விவகாரங்களில் பங்குகொள்ளும் விடயங்கள் நெகிழ்ச்சியற்றதாகவும் தூங்குதல், சுயகற்றல், ஓய்வெடுத்தல் போன்றன நெகிழ்ச்சிக்குட்பட்டதாகவும் அமைய வேண்டும்.

3. To Do List தயாரித்தலும் முன்னுரிமைப் படுத்தலும்

அடுத்தநாள், செய்து முடிக்க வேண்டிய வேலைகள் எவை எனப் பட்டியலிட வேண்டும். பின்னர் முன்னுரிமை அடிப்படையில் அவற்றை ஒழுங்குபடுத்த முதல் நாளே ஆரம்பிக்க வேண்டும். இதன்போது பின்வரும் முறைமையைக் கடைபிடிக்கலாம்:

அடுத்த நாள் செய்துமுடிக்க வேண்டிய வேலைகள் அடங்கிய பிரதான பட்டியலொன்றைத் தயாரித்தல்.

பட்டியலை நன்கு அவதானித்து அதில் வரும் விடயங்களின் முக்கியத்துவத்திற்கேற்ப புதிய அல்லது C எனப் பெயரிடல். இங்கு A என்பது முக்கியமானதும் உடனடியாகவும் நிறைவேற்ற வேண்டிய வேலைகளைக் குறிக்கும். B என்பது முக்கியமானது. ஆனால் உடனடியாக நிறைவேற்ற வேண்டியதல்லாத விடயங்களைக் குறிக்கும். C என்பது செய்தால் நல்லது; செய்யாவிட்டால் பெரியதொரு பாதிப்பை ஏற்படுத்தாத விடயங்களைக் குறிக்கும். உதாரணமாக:

| | |
|---|---|
| 1. பாடசாலைக்குச் செல்லல் | A |
| 2. பிரத்தியேக வகுப்புக்குச் செல்லல் | A |
| 3. சித்தப்பாவின் வீட்டுக்குச் செல்லல் | C |
| 4. T.V பார்த்தல் | C |
| 5. சுய கற்றல் | B |
| 6. வீட்டுப்பயிற்சி செய்தல் | B |

(இவை நபருக்கு நபர் வித்தியாசப்படும் என்பதை மனதில் வைக்கவும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு முன்னுரிமை அடிப்படையில் ஒழுங்கு படுத்தப்பட்ட விடயங்கள் தேவையாயின் மீண்டும் ஒழுங்குபடுத்தப்பட முடியாதவையல்ல. இவ்வாறு பட்டியலிட்டு ஒழுங்குபடுத்தியதன் பின்னர் முன்னுரிமைக்கேற்ப ஒவ்வொரு வேலையிலும் கவனம் செலுத்தி அதற்குரிய நேரத்தை ஒதுக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு நாளுக்குமுரிய வேலைகளைப் பட்டியலிட்டு மேற்கூறியவாறு செய்யும்போது கிடைக்கும் நேரத்தை வீணடிக்காமல் ஏராளமான வேலைகளைக் கச்சிதமாகச் செய்து முடிக்கலாம்.

இன்று எல்லோருடைய கைத்தொலைபேசிகளிலும் Laptopகளிலும் todo list தயாரிப்பதற்கான நிறைய வசதிகள் காணப்படுகின்றன. அவற்றைத் தாராளமாகப் பயன்படுத்திப் பிரயோசனமடைந்து கொள்ளலாம்.

4. Time Limit - நேரத்தை வரையறுத்துக் கொள்ள

எந்தவொரு வேலையாக இருந்தாலும் அதற்கு எவ்வளவு நேரம் ஒதுக்கலாம் என்பதைத் தீர்மானித்து குறிப்பிட்ட அந்த நேரத்தினுள் வேலைகளை முடிப்பதற்கு முயற்சிக்க வேண்டும். உதாரணமாக, ஒரு தேவைக்காக நண்பனைச் சந்திக்க நாடினால் அவரைச் சந்தித்துப் பேசுவதற்கு 30 நிமிடங்கள் தேவையாயின் அதை வரையறுத்துக் குறித்துக் கொள்வதுடன் குறிப்பிட்ட நேரத்தினுள் சந்திப்பை மேற்கொள்ள முயற்சிக்க வேண்டும்.


5. பிற்போடுவதைத் தவிர்த்தல்

உடனடியாகச் செய்ய வேண்டிய வேலைகளை நாளைக்கு, நாளைக்கு என்று பிற்போடக் கூடாது. அவ்வாறு பிற்போடும்போது நம்மையறியாமலேயே நிறைய வேலைகள் ஒன்றாகக் குவிந்து சுமையாக அமைவதைத் தவிர்க்க முடியாமல் போகும். எனவே, நாளாந்த வேலைகளை பெரும்பாலும் அன்றன்றைக்கே செய்து முடிக்க வேண்டும். உதாரணமாக, குறிப்பிட்ட திகதியில் கொடுக்க வேண்டிய ஒப்படை ஒன்றை குறிப்பிட்ட காலத்திற்கு முன் செய்ய ஆரம்பிக்காமல் நாளைக்குச் செய்வோம், நாளைக்குச் செய்வோம் எனப் பிற்போட்டு பிற்போட்டு கடைசியில் ஒப்படை கொடுக்க வேண்டிய திகதிக்கு முந்திய நாள் தட்டுத் தடுமாறி அரையும் குறையுமாக ஒப்படையைச் செய்துகொடுத்து குறைந்த புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடலாம்.

இது போன்ற இன்னும் பல வழிமுறைகள் காணப்படுகின்றன. இத்துறையில் வழிகாட்டவென நிபுணத்துவம் பெற்ற பலரும் காணப்படுகின்றனர். அவர்களைத் தொடர்பு கொள்வதன் மூலமும் பல விடயங்களைக் கற்றுப் பயன்பெற முடியும்.

நாம் இருக்கின்ற இந்த நோன்பு மாதம் நன்மைகளை அதிகம் கொள்ளையடித்துக் கொள்ளவும் அதிகமான விடயங்களைக் கற்றுக் கொள்வதற்கும் ஏதுவான ஒரு காலப்பகுதியாகும். எனவே, விளையாட்டுக்களிலும் வீண் கேளிக்கைகளிலும் இக்காலப் பகுதியைக் கழித்து நன்மைகளையும் பெறுமதியான நேரங்களையும் இழந்துவிடாமல், நேரத்தை நன்கு திட்டமிட்டுப் பயன்படுத்துவதினூடாக உச்சப் பயனைப் பெறுவதோடு எதிர்வரும் காலத்துக்குத் தேவையான பயிற்சியையும் பெற்றுக்கொள்ள முயற்சியுங்கள். ஈருலகிலும் வெற்றி பெறலாம், இன்ஷா அல்லாஹ்.

# மைக்ரோவேவ் அவண்



இன்று நம் வீட்டு சமையலறைகளில் இடம்பிடித்திருக்கும் மைக்ரோவேவ் அவண்கள் கண்டுபிடிக்கப்பட்டது எப்படி என்று தெரியுமா?

இரண்டாம் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம் அது. அப்போது விமானங்களையும் கப்பல்களையும் கண்டறிய உதவும் ரேடார்களில் மேக்னட்ரான் என்ற பொருள் பயன்படுத்தப்பட்டது. அதன் அருகில் கைகளைக் கொண்டு சென்றால் குளிருக்கு இதமாக, வெது வெதுப்பாக இருக்கும். பொர்சி ஸ்பென்சர் என்ற அமெரிக்கர் அப்படி அடிக்கடி குளிர் காய்வார். ஒரு பெரிய மின்குமிழில் இருந்து வெளிவரும் அளவு வெப்பம் அந்த மேக்னட்ரானில் இருந்து வெளிவரும். ஒருநாள் ஸ்பென்சர் குளிர்காய்ந்து கொண்டிருந்தபோது அவரது சட்டைப் பையில் இருந்த மிட்டாய் உருகிவிட்டது. அப்போதுதான் அவருக்கு ஒரு ஐடியா தோன்றியது. இதைச் சமையல் உபகரணமாகப் பயன்படுத்தலாமே என்று சிந்தித்தார் அவர். அதன் விளைவாக மைக்ரோவேவ் அவண் பிறந்தது.

ஸ்பென்சரும் அவரது உதவியாளர்களும் தங்கள் ஆராய்ச்சியைத் தொடர்ந்தனர். பொப் கோர்ன், இறைச்சி போன்றவற்றைக் கொண்டு பரிசோதித்தார்கள். அவணுக்குள் வைக்கப்பட்ட அவை, நன்றாகச் சமைக்கப்பட்டிருந்தன. தொடர்ந்து, வர்த்தக ரீதியாக மைக்ரோவேவ் அவண் தயாரிப்பு தொடங்கப்பட்டது. 1953ம் ஆண்டில் உரிமம் பதிவு செய்யப்பட்டு, 7 ஆண்டுகளில் உலகின் வசதி மிக்க சமையலறைகளில் நுழைந்துவிட்டது மைக்ரோவேவ் அவண்.

பெர்சி ஸ்பென்சரின் கவனிக்கும் திறனும் ஆர்வமும் ஒரு கண்டுபிடிப்பாக மலர்ந்து, இன்று பலரது சமையல் வேலையை எளிதாக்கி இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10,11 தர மாணவர்களுக்கானது

# விஞ்ஞானம்

ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப்

## பௌதிகவியல் - தரம் 10

## அமுக்கம் (Pressure)

ஓரலகு மேற்பரப்பில் செங்குத்தாகத் தாக்கும் விசை அமுக்கம் எனப்படும்.

அமுக்கம் (P) = $\frac{\text{விசை (F)}}{\text{பரப்பு (A)}}$ அலகு - $\frac{N}{m^2}$ = $Nm^{-2}$ = Pa (பஸ்கால்)

பரப்பொன்றின் மீது குறித்தளவு விசை தாக்கும்போது பரப்பளவு அதிகரிக்குமாயின் அமுக்கம் குறையும், மேற்பரப்பு குறையுமாயின் அமுக்கம் கூடும்.

**01.** அன்றாட செயற்பாடுகளில் அமுக்கத்தின் செல்வாக்குப் பற்றிய 4 விடயங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றில் எது அதிக அமுக்கத்தை ஏற்படுத்துவது?

i. கட்டடங்களின் சுவரைவிட அத்திவாரம் அகலமாக அமைக்கப்படல்.

ii. கடைகளில் சவர்க்காரத்தைத் துண்டாக்க நூல் பயன்படுத்தப்படல்.

iii. வாகனத்தை உயர்த்தும் யாக்கிற்குக் கீழே பலகை பயன்படுத்தப்படல்.

iv. நிறைகூடிய பொதியை முதுகில் வைத்துச் செல்லல்.

### திரவ, வாயு அமுக்கங்களின் பண்புகள்

1. அமுக்கம் எல்லாத் திசையிலும் தொழிற்படும்.
2. ஆழத்துடன் அமுக்கம் அதிகரிக்கும்.
3. ஒரே ஆழத்திலுள்ள புள்ளிகளில் அமுக்கம் சமனாகும்.
4. அடர்த்தி கூட அமுக்கம் கூடும்.

**02.** 15 cm உயரமான பாத்திரமொன்றில் 10 cm உயரத்திற்கு இரசம் உள்ளது. பாத்திரத்தின் அடியில் ஏற்படும் திரவ அமுக்கம் யாது?

(இரச அடர்த்தி = 13600$kgm^{-3}$, g= 10 $Nkg^{-1}$)

### குறித்த புள்ளியொன்றில் நிலவும் திரவ அமுக்கத்திற்கான சமன்பாடு


$$P = h\rho g$$

h = குறித்த புள்ளி வரையான ஆழம் (m)

$\rho$ = திரவ அடர்த்தி ($Kgm^{-3}$)

g = புவியீர்ப்பு ஆர்முடுகல் ($Nkg^{-1}$)

**03.** மோட்டார் வாகனங்களிலுள்ள நீரியல் தடுப்புத் தொகுதியின் தொழிற்பாட்டைக் காட்டும் மாதிரி வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது.




i. இங்கு தடுப்பு மிதியை அழுத்தும்போது துணை முசலம் தள்ளப்படுவதால் தடுப்பு ஏற்படுகின்றது. இது எவ்விதம் நிகழ்கிறது என்பதைக் குறிப்பிடுக.

ii. தடுப்பு விசையை ஏற்படுத்தும் துணை முசலத்தின் பரப்பு பிரதான முசலத்தை விட அதிகமாக இருப்பதன் நன்மை யாது?

iii. இத்தொகுதியினுள் வளி புகுமாயின் எவ்வாறான பாதிப்பு ஏற்படும் எனக் கூறுக.

iv. திரவ அமுக்கம் பயன்படும் இன்னொரு சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வளிமண்டல அமுக்கத்தை அளத்தல்

♦ புவியில் வளியின் நிறையினால் எல்லாப் பொருட்களின் மீதும் ஏற்படும் அமுக்கம் வளி அமுக்கம் ஆகும்.

♦ கலிலியோ, வளிமண்டலம் 9.5 m வரை உயர முள்ள நீர் நிரலைப் பேண முடியுமென கண்டறிந்து வளி அமுக்கத்தை அளவிடும் பாரமானியை முதலில் அமைத்தார். பின்னர் அவரின் மாணவரான தொரிசெல்லி உயரங்குறைந்த இரசப் பாரமானியை 1943இல் உருவாக்கினார்.

♦ இரசப் பாரமானியில் கடல் மட்டத்தில் வளி மண்டலம் 76 cm உயரமுடைய இரசநிரலைத் தாங்கும். எனவே, வளிமண்டல அமுக்கம் 76 cm இரசநிரலால் ஏற்படும் அமுக்கத்திற்குச் சமனாகும். இது ஏறத்தாழ $10^5$ $Nm^{-2}$ அமுக்கத்திற்குச் சமனாகும்.

♦ இரசப் பாரமானியில் இரசம் பயன்படுவதற்குக் காரணம் அதன் உயர் அடர்த்தி ஆகும்.

**04.** உயரமான பிரதேசமொன்றில் அமைக்கப்படும் இரசப் பாரமானியொன்றில் இரச நிரலின் உயரம் 76 cm இலும் கூடியதாகவா, குறைந்ததாகவா அல்லது மாறாத அளவிலா காணப்படும்? உமது விடைக்கான காரணத்தைக் குறிப்பிடுக.

**05.** வளி அமுக்கம் பயன்படும் சந்தர்ப்பமாக பின் வரும் எது அமையாது?

i. புகுத்திகளில் மருந்தை உட்செலுத்துவதற்கு

ii. உறிஞ்சி குழாய் மூலம் பானங்களை அருந்துதல்

iii. மோட்டார் வாகன தடுப்புத் தொகுதி

iv. இறையி மூலம் நீர்த்தாங்கியின் நீரை வெளி யேற்றுல்.

### மேலுதைப்பு (Upthrust)

பாயி ஒன்றில் (திரவம், வாயு) ஒரு பொருள் இருக்கும்போது அது பாயியின் மேலுதைப்பிற்கு உள்ளாகின்றது. இதன்போது பொருள் தன் நிறைக்குச் (w) சமனான பாயியை இடம்பெயர்க் குமாயின் அது மிதக்கும்.

**06.** மிதத்தல் கோட்பாட்டுடன் தொடர்புபட்ட விதியை முன்வைத்தவர் யார்? அவ்விதியைக் குறிப்பிடுக.

**07.** விற்றராசொன்றில் கட்டித் தொங்கவிடப்பட்ட பொருள் ஒன்று 0.5N வாசிப்பைக் காட்டியதுடன் பொருளை அவ்வாறே நீரினுள் அமிழ்த்தும்போது விற்றராசின் வாசிப்பு 0.3N ஐக் காட்டியது. இங்கு பொருளின் மீது ஏற்பட்ட மேலுதைப்பானது.


i. 0.5N  ii. 0.3N  iii. i. 0.2N  i. 0.8N

### நீரமானி (Hydrometer)

♦ மிதத்தல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு திரவங்களின் அடர்த்தியை (தன்னீர்ப்பை) அறியப் பயன்படும் உபகரணம் நீரமானி ஆகும்.

♦ திரவங்களின் அடர்த்தி அதிகரிக்க பொருளின் நிறைக்குச் சமமான மேலுதைப்பிற்கு இடம் பெயர்க்கும் திரவ அளவு குறையும். இதனால் அதிக ளவில் பொருள் மிதக்கும்.

**08.** உப்புக் கரைசல் ஒன்றினுள் வைக்கப்பட்ட நீர் மானியொன்று அதன் X எனும் அடையாளமிடப் பட்ட அளவிடை வரை அமிழ்ந்தவாறு மிதக்கின்றது. இந் நீரமானியை இதிலிருந்து வெளியே எடுத்து மண்ணெண்ணெய் கொண்ட முகவையொன்றில் இட்டால் ஏற்படும் மாற்றம் யாது?




i. X மேல் உயர்ந்து காணப்படும்

ii. X அதே அளவில் அமிழும்

iii. X அதிகளவில் அமிழும்

iv. X அமிழும் அளவு பற்றிக் கூற முடியாது

**09.** இரும்பு நீரில் அமிழுமாயினும் இரும்பினாலான கப்பல் மிதக்கிறது. இதற்கான காரணத்தை விளக் கும் கூற்று.

i. கப்பலின் நிறையளவு மேலுதைப்பு ஏற்படுகின் றமை.

ii. கப்பலின் நிறையிலும் பார்க்க அதிகளவிலான மேலுதைப்பு உருவாதல்.

iii. கப்பலின் அதே அளவு நீர் இடம்பெயர்க்கப் படுகின்றமை.

iv. கப்பலின் பெரிய பருமன் காரணமாக இருத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தரம் 11 - உயிரியல்: அங்கிகளின் இனப்பெருக்கம்

♦ அங்கிகள் தமது ஆயுட்காலத்தில் தம்மைப் போன்ற அங்கிகளை உருவாக்குதல் இனப்பெருக்கம் எனப்படும். இது பின்வரும் 2 வகைப்படும்.

1. இலிங்கமில் முறை (பதியமுறை) இனப் பெருக்கம்:- இலிங்க உறுப்புகள் அல்லாத பதியப்பகுதிகள் மூலம் நடைபெறுவது.
2. இலிங்கமுறை இனப்பெருக்கம்:- இலிங்கப் பகுதிகள் மூலமாக நடைபெறுவது.

**01.** தாவரங்களின் இயற்கைப் பதிய முறைகளின் சில வகைகள் கீழே தரப்பட்டுள்ளன. கூடுகளில் வர வேண்டிய பெயரை அல்லது உதாரணத்தை எழுதுக.




**02.** இழைய வளர்ப்பு முறையில் தாவரங்களைப் பெருக்கிக் கொள்வதற்கு அவசியமான நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.

**03.** இழைய வளர்ப்பு முறையினைப் பயன்படுத்தி சாதாரணமாக விவசாயிகளினால் தாவரங்களைப் பெருக்கிக் கொள்ள முடியாமைக்கான 2 காரணிகளைக் குறிப்பிடுக.

**04.** தாவரங்களில் தன்மகரந்த சேர்க்கையைத் தவிர்த்து அயன் மகரந்த சேர்க்கையை மேற்கொள்ளவென பல இசைவாக்கங்கள் உள்ளன. இவற்றில் கொடிதோடையின் பூவில் காணப்படும் இசைவாக்கத்தை குறிக்கும் விடையைத் தெரிவுசெய்க.

i. ஆணகம், பெண்ணகம் வெவ்வேறு காலத்தில் முதிர்வடைதல்.

ii. ஏகலிங்கப் பூக்களாகக் காணப்படல்.

iii. தன்மலட்டுத் தன்மையைக் கொண்டிருத்தல்.

iv. சமனில்லாத் தம்பவுண்மையைக் கொண்டிருத்தல்.

**05.** கருக்கட்டலின் பின் தாவரங்களின் பூக்களின் பகுதிகள் பழத்தின் எப்பகுதிகளாக மாறும் எனும் தொடர்பு தரப்பட்டுள்ளது. இதில் எது பொருத்த மற்றதாகும்?

| | | |
|---|---|---|
| i. முட்டைக்கலம் | - | முளையம் |
| ii. சூலக சுவர் | - | வித்துறை |
| iii. சூல்வித்து | - | வித்து |
| iv. சூலகம் | - | பழம் |

### மனித இனப்பெருக்கம்

மனித இனம் அழிவடையாது தொடர்ந்தும் நிலைத்திருக்க இனப்பெருக்கம் உதவுகிறது.

மனிதனில் ஒரு மடியமான புணரிக்கலம் ஒடுக்கற்பிரிவு எனும் கலப்பிரிவினால் உருவாகி ஆண், பெண் புணரிக்கலங்கள் கருக்கட்டலுக்கு உள்ளாவதால் இருமடியமான முளையம் உருவாகிறது.

**06.** மனித இனப்பெருக்கத் தொகுதியின் தொழிற்பாட்டில் பல்வேறு ஓமோன்கள் பங்காற்றுகின்றன. ஆண்களின் துணைப் பாலியல்புகளை ஏற்படுத்துவதுடன் தொடர்புபட்ட ஓமோன் எது?

i. தெசுத்தெசித்திரோன் ii. ஈஸ்திரோஜன்

iii. புரொஜெஸ்திரோன் iv. தைரொட்சின்

**07.** பின்வரும் சந்தர்ப்பங்களில் எதில் ஒத்த இரட்டையர், ஒவ்வா இரட்டையர் உருவாகும் என்பதை எழுதுக.

i. இரு சூல்கள் விடுவிக்கப்பட்டு இரண்டும் தனித் தனியாக கருக்கட்டலிற்கு உள்ளாதல்.

ii. கருக்கட்டலடைந்த நுகம் இரண்டாகப் பிளவடைந்து இரு முளையாக உருவாதல்.

**08.** தாயின் கருப்பைச்சுவருக்கும் சிசுவின் உடலுக்கு மிடையே பதார்த்தங்களைப் பரிமாற்றுவதற்குக் காணப்படும் கட்டமைப்பு எது? இக்கட்டமைப்பு காணப்படுவதன் நன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக.

**09.** மேற்படி கட்டமைப்பினூடாகவும் சில பாலியல் நோய்கள் கடத்தப்படுகின்றன. அத்தகைய இரு பாலியல் ரீதியான நோய்களைக் குறிப்பிடுக.

**10.** பின்வரும் பாலியல் ரீதியான நோய்களை ஏற்படுத்தும் நோய்க் காரணிகளை எழுதுக.

i. சிபிலிஸ்:..........................................................

ii. கொனோரியா:....................................................

iii. ஹேபஸ்:..........................................................

iv. எயிட்ஸ்:..........................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருஷ்மோர் மலை தேசிய நினைவகம்

## உலக அதிசயங்கள்

*பாத்திமா ஹில்மா ஹில்மி*
*பேருவளை*




அமெரிக்காவில் உள்ள தென் டெகோடா (South Dakota) என்ற இடத்தில் ருஷ்மோர் தேசிய நினைவகம் அமைந்துள்ளது. ருஷ்மோர் மலையில் 150 ஆண்டு கால அமெரிக்க வரலாற்றைக் குறிக்கும் வகையில் இந் நினைவகம் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான ஜோர்ஜ் வொஷிங்டன், ஜெஃபர்சன், தியோடர் ரூஸ்வெல்ட் மற்றும் ஆபிரஹாம் லிங்கனின் சிலைகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஜனாதிபதிகளின் தலைகள் மட்டுமே சிலைகளாக செதுக்கப்பட்டிருக்கின்றன.

சிலைகள் என்றால் சாதாரண சிலைகள் அல்ல. ஒவ்வொன்றும் இராட்சத வடிவம் கொண்டவை. சிலைகளின் உயரம் 60 அடி. சிலைகளின் மூக்கின் நீளம் 20 அடி. வாயின் அகலம் 18 அடி. காது 11 அடி. 1,278 ஏக்கர் பரப்பளவில் இந்த ருஷ்மோர் தேசிய நினைவகம் அமைக்கப்பட்டிருக்கிறது.

சார்ள்ஸ் ருஷ்மோர் என்பவர் தேசிய நினைவகம் அமைக்க உதவினார். எனவே, அவரது பெயராலேயே ருஷ்மோர் மலை என்று அழைக்கப்படுகிறது. 1927ஆம் ஆண்டு சிலை வடிக்கும் வேலை தொடங்கப்பட்டது. 1941ஆம் ஆண்டுதான் முழுமை அடைந்தது. பதினான்கு ஆண்டு காலம் குட்ஸன் தலைமையில் 400 தொழிலாளர்களின் உழைப்பில் ருஷ்மோர் நினைவகம் உருவாக்கப்பட்டது.

# கிளிமஞ்சாரோ எரிமலை




இயற்கை அதிசயங்களில் ஒன்று கிளிமஞ்சாரோ எரிமலை. கிபோ (Kibo), மாவேன்சி (Mawensi) மற்றும் ஷிரா (Shira) என்ற 3 எரிமலைக் கூம்புகளைக் கொண்டது. இது தான்சானியாவின் வட கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. 170 ஆண்டுகளாக இந்த எரிமலை வெடித்ததாகத் தகவல் எதுவும் இல்லை.

கிபோவின் சிகரம் 5,895 மீ உயரம் கொண்டது. ஆபிரிக்காவின் மிக உயர்ந்த மலைச் சிகரம் இது. கிபோவின் நடுப்பகுதியில் 600 m க்கு எரிமலை வெடித்த பள்ளம் காணப்படுகிறது. அதன் மீது சாம்பர் நிறைந்திருக்கின்றது. மாவேன்சி ஆபிரிக்காவின் 3வது பெரிய மலைச்சிகரம். இதில் ஏறுவது மிகவும் கடினம்.

அம்போசெலி தேசிய பூங்காவிலிருந்து கிளிமஞ்சாரோவைக் கண்டு ரசிக்கலாம். கிளிமஞ்சாரோவின் உச்சியில் எப்போதும் பனி படர்ந்து காணப்படுகிறது. டிசம்பர், ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்கள் மலை ஏறுவதற்கு வசதியாக இருக்கும். முதல் மலை ஏற்றம் 1889ஆம் ஆண்டு நிகழ்ந்தது. அதிகளவான மக்கள் மலை ஏறுவதில் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேறுவதற்குத் தேவை விடா முயற்சியும் தன்னம்பிக்கையும்

"வாழ்க்கையின் யதார்த்த நிலைகளைக் கண்டு உன் பயணத்தை நிறுத்தி விடாதே. விடா முயற்சியே வெற்றிக்கு வழியாகும்" என்கிறது ஒரு பொன்மொழி.

அன்பான தம்பி, தங்கைகளே! நீங்கள் எக் காரியத்தை செய்ய நினைத்தாலும் ஆரம்பமாக அதை என்னால் செய்ய முடியும் (I can do it) என்று திடமாக நம்பிக்கை வையுங்கள். அந்த நம்பிக்கையே பாதி வெற்றியாக உங்களுக்கு அமையும். அந்த நம்பிக்கையுடன் தொடர்ந்து முயற்சிப்பீர்களாயின்




வெற்றியின் மகுடத்தை உங்களால் சூடலாம்.

தம்பி தங்கைகளே! எதிர்காலம் உங்கள் கைகளில்தான் தங்கியுள்ளது. நீங்கள் நாளை மலரப் போகும் மலர்கள். இன்று நீங்கள் முகிழ்ந்திருக்கும் மொட்டுக்கள். இன்றே எதிர்கால வளர்ச்சிக்கான முயற்சி, தன்னம்பிக்கை என்பவற்றை வளர்த்துக் கொள்வீர்களெனில், நாளைய விடியலை முக மலர்ச்சியுடன் சந்திக்கப் போகும் வீரர்கள் நீங்கள் தான்.

நாம் இவ்வுலகில் சாதிக்கப் பிறந்தவர்கள். அத்தகைய ஆற்றல்களுடனேயே இறைவன் மனிதனைப் படைத்துள்ளான். அபார சிந்தனை ஆற்றலை இறைவன் மனிதனுக்குத் தந்துள்ளான். ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். கணினியைக் கண்டுபிடித்ததாலேயே இன்று உலகமே எம் கையில் தவழ்கிறது. தோமஸ் அல்வா எடிசன் மின் குமிழைக் கண்டுபிடித்ததால் இன்று எமது இரவுப் பொழுதுகள் பகலாய் ஜொலிக்கின்றன. இவை போல் உலகில் உருவான சாதனைகள் அனைத்தும் நினைத்த மாத்திரத்தில் உருவானவை அன்று. குறிப்பிட்ட சாதனை வீரர்களின் திடமான நம்பிக்கையுடன் கூடிய விடா முயற்சியின் விளைவாகும்.

இந்த சாதனை வீரர்கள் அவ நம்பிக்கையுடனும் முயற்சியின்றியும் இருந்திருந்தால் இன்று நாம் இவற்றை அனுபவிக்கத்தான் முடியுமா? மாதங்கள் வருடங்களாகி எத்தனை காலங்கள் கடந்தாலும் முயற்சிகளை ஒருபோதும் நாம் கைவிடக்கூடாது. தமக்கென்று இலட்சியத்தை உருவாக்கி அதில் திடமான நம்பிக்கை வைத்து வெற்றி பெற என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமோ அவற்றில் தம்மை முழுதாக ஈடுபடுத்த வேண்டும்.

நாம் ஒரு தூரப் பிரதேசத்தில் இருக்கும் நகரம் ஒன்றுக்குச் சென்றால் அங்கு எமக்கு தாராளமான பணம், பொருள் புதையல்கள் கிடைக்கும் என்று வைத்துக் கொள்ளுங்கள். எவ்வாறான சிரமங்களை எதிர்கொண்டாலும் நாம் அங்கு செல்ல முனைவோமல்லவா? அதேபோலத் தான் எமது வெற்றியும்.

"வெற்றி பெற வேண்டும் என்று நினைத்துப் போராடாதே. தோல்வி அடையக் கூடாது என்று நினைத்துப் போராடு. வெற்றி உன் கையில்" (அலெக்ஸாண்டர்)

எனவே, வெற்றியை நோக்கிச் செல்லும் பாதையில் பல வகையான தடைகளை நீங்கள் சந்திக்க நேரிடலாம். நிச்சயமாக தடைகள் இன்றி வெற்றி கிடையாது. சிரமங்களை அனுபவிக்காது இன்பங்களை நாம் நுகர்ந்தால் அது இனிப்பில்லாத சர்க்கரையைப் போன்றிருக்கும். எமது வெற்றியின் பெறுமதி எமக்கு விளங்க வேண்டுமாயின் நிச்ச யமாக நாம் பல தடைகளைக் கடந்து வெற்றியின் இடத்தை அடைய வேண்டும்.

"தோல்வியே இல்லாமல் இருப்பதற்குப் பெயர் வெற்றி அல்ல. நம்பிக்கையைக் கைவிடாதே. அது தான் வெற்றியின் முதல் படி. தோல்வி அடைவது துன்பம்தான். ஆனால், வெற்றிக்கு முயற்சிக்காது இருப்பது அதைவிடத் துன்பமாகும்"

என்பது ஒரு முதுமொழியாகும். நாம் ஒரு முயற்சியில் ஈடுபடும்போது பல தடைகள் ஏற்படும் என்று முன்னர் சொன்னேன். அது பல வகையாக அமையும். எமது இலட்சியப் பாதையில் நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணிக்கும்போது ஏனைய சக மனிதர்களாலும் தடைகள் எமக்கு ஏற்படலாம்.

"ஆட்டின் வேடத்தில் ஓநாய்களும் வரலாம். ஆதலால் நீயோ எச்சரிக்கையாக இரு."

இத்தகைய நிலைமைகளை சகித்துக் கொள்ளக் கூடிய தைரியத்தையும் நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் இக்கட்டுரையின் முதலாவது அம்சமாகவே நான் குறிப்பிட்டிருந்த இறை பக்தி எமது வெற்றிப்பாதையில் சிரமங்களுக்கு மத்தியிலும் திடமான நம்பிக்கையை ஏற்படுத்தும்.

"இந்த உலகமே சேர்ந்து உனக்கு ஒரு நன்மையை செய்ய நினைத்தாலும் இறைவன் நாடவில்லை என்றால் அதை உன்னால் அடைய முடியாது. அதே போல் இந்த உலகமே சேர்ந்து உனக்கு ஒரு தீமையை செய்ய நினைத்தாலும் இறைவன் நாடவில்லை என்றால் அது உன்னை அணுகாது."

(நபிமொழி)

இவ்வுலகின் அற்பப் படைப்புக்களுக்கு பயந்து நாம் ஒதுங்க வேண்டியதில்லை. இறைவனைத் தவிர யாராலும் எதையுமே எமக்குத் தந்து விடவும் முடியாது. எம்மிடமிருந்து அழித்து விடவும் முடியாது. நாம் இறை நம்பிக்கையை கைவிடக்கூடாது. அதுதான் எமது வெற்றியின் முழு வடிவம். என்றும் இறைவன் எம்முடன் இருக்கிறான் என்ற உறுதியுடன் இலட்சியத்தை நோக்கி திடமான நம்பிக்கையுடன் தொடர்ந்து முயற்சி செய்யுங்கள்; வெற்றி வாகை சூடுங்கள்.

வாழ்க்கை ரோஜாப்பூக்களின் மெத்தையல்ல.

(Life is not a bed of rose)

——— எம்.வை.எப். சியாமா, மாவனல்லை

# தண்ணீரின் மேற்பரப்பில் நடந்து செல்லும் பூச்சியினம்



தண்ணீரின் மேற்பரப்பில் நடந்து செல்வது என்பது மனிதனால் முடியாத காரியம். இருப்பினும் சில படைப்புகள் அல்லாஹ்விடம் இருந்து கிடைக்கப் பெற்ற பிரத்தியேகமான உடலமைப்பைப் கொண்டு தண்ணீரின் மேற்பரப்பில் எளிதாக நடந்து செல்லும் திறன் கொண்டவையாக இருக்கின்றன.

பொண்ட் ஸ்கேட்டர் (Pond Skater) என்றழைக்கப்படும் பூச்சியினம் நீண்ட, மெலிந்த, சுருங்கி விரியும் தன்மை கொண்ட தோலினால் படைக்கப்பட்ட தனது கால்களைக் கொண்டு தண்ணீரின் மேற்பரப்பில் மிக எளிதாக நடந்து செல்கின்றது.

இதன் கால்கள் தண்ணீரினுள் மூழ்குவதில்லை. எனவேதான், மனித இனம் உட்பட மற்றைய படைப்பினங்களாலும் முடியாத இந்தக் காரியத்தை இந்தப் பூச்சியினம் மிக எளிதாகச் செய்து முடிக்கிறது.

"அல்லாஹ் படைத்திருக்கும் பொருட்களில் அவர்கள் எதையுமே (உற்றுப்) பார்க்கவில்லையா? அவற்றின் நிழல்கள் வலமும் இடமுமாக சாய்கின்றன. மேலும், அவை பணிந்து அல்லாஹ்வுக்கு வழிபடுகின்றன. வானங்களிலுள்ளவையும் பூமியில் உள்ளவையும் ஜீவராசிகளும் மலக்குகளும் அல்லாஹ்வுக்கே சிரம் பணிந்து வணங்குகின்றன. அவர்கள் (ஆணவம் கொண்டு) பொருமையடிப்பதில்லை." (16: 48-49)

——— *ஏ.சீ. பஸ்னா, தரம்: 11*

*பாத்திமா ஸஹ்றா பெ.அ.க, ஓட்டமாவடி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஸ்ஹர் ஸகரிய்யா

**ரியாத்** நகரில் நடுத்தரமான ஒரு குடும்பத்தில் பிறந்து தனது விடா முயற்சி, அர்ப்பணம் என்பவற்றின் காரணமாக ஸஊதி அரேபியாவின் பிரதான முப்தியாக உயர்ந்த ஒருவரே அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் இப்னு பாஸ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள். அவரது குடும்பத்தின் பொருளாதார நிலை வியாபாரம், விவசாயம் என்பவற்றிலேயே தங்கியிருந்தது. இவர் ஹிஜ்ரி 1330 இல் பிறந்தார். இவரது தந்தை சிறு பராயத்திலேயே மரணித்து விட்டதால் சிறு வயதிலேயே குடும்பச் சுமையை பொறுப்பேற்க நிர்ப்பந்திக்கப்பட்டார். எனினும், கல்வியில் அவருக்கிருந்த ஆர்வமும் அவரது தாயின் தொடர்ச்சியான ஊக்குவிப்புமே உலகம் போற்றும் அறிஞராக அவர் மாறுவதற்கு பிரதான காரணிகளாக அமைந்தன.



# அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் இப்னு பாஸ் (ரஹிமஹுல்லாஹ்)

இவர் அல்குர்ஆனை சிறு வயதிலேயே மனனம் செய்து கொண்டார். இவருக்கு 16 வயதாக இருக்கும்போது அவரது இரு கண்களிலும் ஏற்பட்ட நோயின் காரணமாக பார்வையை படிப்படியாக இழந்து 20 வயதில் பார்வையை முற்றாக இழந்தார். பார்வையின்மை என்பது ஒருபோதும் அவரது அறிவுத் தேடலுக்கு தடையாக இருக்கவில்லை. ஆரம்பத்தில் 'குத்தாப்' எனப்படும் பள்ளிக்கூடமும் அதனைத் தொடர்ந்து பள்ளிவாசலுமே அவரின் பிரதான பாடசாலைகளாக அமைந்தன. இவர் அபார ஞாபக சக்தியுள்ளவராக இருந்தார்.

'ஸிஹாஹுஸ் ஸித்தா' கிரந்தங்களில் ஒன்றில் சர்ச்சைக்குட்பட்ட ஒரு ஹதீஸைக் கூறினால் அந்த ஹதீஸின் மூலம், அதன் அறிவிப்பாளர்கள், அதன் பலம்-பலவீனம் பற்றிய ஹதீஸ் துறை அறிஞர்களின் கருத்துக்கள் போன்றவற்றை உடனுக்குடன் சொல்லும் ஆற்றல் அவருக்கிருந்தது. அல்புகாரி, முஸ்லிம் ஆகிய கிரந்தங்களை வரி வரியாக மனனம் செய்திருந்தார். ஒரு பிரச்சினை முன்வைக்கப்பட்டால் அப்பிரச்சினையை எப்படித் தீர்ப்பது, அப்பிரச்சினையை முன்னைய இமாம்கள் எப்படி எதிர்கொண்டார்கள் என்பவற்றை நூல்கள், பக்க இலக்கம் என்பவற்றுடன் கூறக் கூடியவராக இருந்தார்.

இவரின் கல்விப் பாதையில் பிரதான ஆசிரியராக விளங்கியவர் முஹம்மத் இப்னு இப்ராஹீம் ஆவார். தனது வாழ்வின் 14 வருடங்களை இவர் முழுமையாக அவருடனேயே கழித்தார். இவரிடமிருந்தே இமாமவர்கள் ஷரீஆவின் அனைத்துக் கலைகளையும் கற்றுக் கொண்டார். ஹன்பலி மத்ஹபை அடிப்படையாகக் கொண்டு தனது சட்டக் கருத்துக்களை அமைத்துக் கொண்ட போதும், ஏனைய இமாம்களின் கருத்துக்களையும் நன்கு விளங்கி வைத்திருந்தார். ஹன்பலி மத்ஹபின் ஒரு கருத்து பொருத்தமற்றதாக அமையும் சந்தர்ப்பத்தில் மற்றும் பல கருத்துக்களுடன் குறித்த கருத்தை ஒப்பீடு செய்து அவற்றுள் சிறந்த கருத்தை பின்பற்றுபவராக இவர் இருந்தார். முன்னைய அறிஞர்களின் கிரந்தங்களை வாசிப்பதிலும் அவற்றை கற்பிப்பதிலும் கூடிய கவனம் செலுத்தினார்.

இவர் முதன் முதலாக கரஜ் பிரதேசத்தில் நீதிபதியாகக் கடமையாற்றினார். இக்காலப் பிரிவில் நீதி வழங்குவதில் அரபு மண்ணிலேயே மிகப் புகழ்பெற்ற ஒருவராக விளங்கினார். நீதித் துறையுடன் மாத்திரம் தனது வாழ்வை சுருக்கிக் கொள்ள விரும்பாத இவர், கரஜ் பிரதேசத்தில் பல சமூக சேவைகளில் ஈடுபட்டார். அப்பிரதேச பள்ளிவாசல்களில் தொடர்ச்சியாக குத்பாக்களை நிகழ்த்துதல், பள்ளிவாசல் நிர்வாகங்களை வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்துதல், அழைப்புப் பணியில் ஈடுபடல், கற்பித்தல் போன்ற சமூகப் பணிகளில் ஈடுபட்டார்.

அவரிடம் பாடம் கற்பதற்காக ஜாமிஃ கபீர் எனும் பள்ளிவாசலில் மாணவர் கூட்டம் நிரம்பி வழிந்தது. ஸஊதியில் மட்டுமன்றி யமன், பலஸ்தீன், இராக் போன்ற நாடுகளுக்கெல்லாம் இவரது புகழ் பரவவே, அந்த நாட்டு மாணவர்களும் இவரிடம் கற்பதற்காக கரஜை நோக்கி வந்தனர். நாளாந்தம் கற்க வரும் மாணவர்களின் தொகை அதிகரிக்கவே அப்போதிருந்த மன்னர் பைஸல், ஜாமிஃ கபீருக்கு அருகில் ஏராளமான அறைகளை அமைத்துக் கொடுத்து இப்பணிக்கு தூண்டுதல் அளித்தனர். கரஜ் பிரதேசத்தில் கற்பிப்பதுடன் மாத்திரம் தனது பணியை சுருக்கிக் கொள்ள விரும்பாத இவர், மன்னருடன் ஆலோசித்து துலம் நகரில் மாணவர்களுக்கான ஆரம்பப் பாடசாலை ஒன்றை நிறுவும் முயற்சியில் வெற்றியீட்டினார். இக்காலப்பிரிவில் அவருக்கு மஃஹத் இல்மி என்ற கலாபீடத்திலும் ஷரீஆ கலாபீடத்திலும் கற்பிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

ஹிஜ்ரி 1380 இல் ஸஊதி அரசு இவரை ஜாமிஆ இஸ்லாமியா பல்கலைக்கழகத்தின் பிரதித் தலைவராக நியமித்தது. ஹிஜ்ரி 1390இல் ஜாமிஆவின் வேந்தர் மரணித்ததை அடுத்து அப்பொறுப்பையும் அவர் ஏற்றுக்கொண்டார். இப்பல்கலைக்கழகத்தில் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த மாணவர்கள் கல்வியைத் தொடர்ந்தார்கள். தூய ஸலபி சிந்தனையை தென்னாசிய மற்றும் தென் கிழக்காசிய நாடுகளில் அறிமுகப்படுத்திய வர்கள் இங்கு கற்ற மாணவர்களே.

இவர் ஜாமியாவில் இருந்தபோது முழு உலகமும் பயனடையக் கூடிய வகையில் நூல் பதிப்பகம் ஒன்றை நிறுவினார். இப்பதிப்பகம் இன்று அழைப்புப் பணிகள் செயற்பாடுகளுக்கான மத்திய நிறுவனம் என்ற பெயரில் வளர்ச்சியடைந் துள்ளது.

ஹிஜ்ரி 1395இல் ஸஊதி அரசு இவரை வழிகாட்டல், அழைப்புப்பணி, மார்க்கத் தீர்ப்பு வழங்கல் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் அமைப்பின் தலைவராக நியமித்தது. ஹிஜ்ரி 1413இல் ஸஊதி அரேபியாவின் பிரதான முப்தியாக இவர் நியமனம் பெற்றார். இக்காலத்தில் ஸஊதி அரேபியாவில் காணப்பட்ட இஸ்லாமிய கற்கைகளுக்கான நிறுவனங்கள், தஃவா அமைப்புக்கள் போன்ற அனைத்தினதும் உறுப்புரிமையை இவர் பெற்றிருந்தார். இக்காலத்தில் அவர் செய்த பணிகளை பின்வருமாறு பட்டியற்படுத்த முடியும்:

⇨ உலகெங்கும் காணப்படும் இஸ்லாமிய அமைப்புகளுக்கு உதவுதல்

⇨ நூல்களை வெளியிட்டு இலவசமாக விநியோகிப்பதனூடாக தூய ஸலபி சிந்தனையை உலகெங்கும் அறிமுகப்படுத்தல்.

⇨ பல்கலைக்கழகங்களில் சிறப்புப் பேச்சுகளை நிகழ்த்துதல்.

⇨ உலக முஸ்லிம்களது விவகாரங்களில் கவனம் செலுத்தல்.

⇨ ஆப்கானிஸ்தான், பொஸ்னியா, செச்னியா, காஷ்மீர், எரிட்ரியா, சோமாலியா, மியன்மார், கொஸோவா போன்ற நாடுகளில் முஸ்லிம்கள் எதிர்கொண்ட துன்பங்களை உலகறியச் செய்தல்.

⇨ பள்ளிவாசல்களை உலகெங்கும் நிறுவுவதற்கு ஊக்கமளித்தல்.

இவர் மார்க்கக் கலைகள், சமூகம்சார் விடயங்கள், நம்பிக்கைக் கோட்பாடுகள், பித்அத், சட்டம், அதன் அடிப்படைகள், தஃவா, நவீன முஸ்லிம் பெண், சிந்தனைப் படையெடுப்பு, அரபு தேசியவாதம் போன்ற தலைப்புக்களில் பல நூல்களை வெளியிட்டுள்ளார். அவரது நூல்களில் அதிகமானவை மொழிபெயர்ப்பு செய்யப்பட் டுள்ளன. அவரது மார்க்கத் தீர்ப்புக்களை அறிவதிலும் அவற்றைப் பின்பற்றுவதிலும் முஸ்லிம்கள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். இவரது பெயரை நினைவுபடுத்துமுகமாக எமது நாட்டில் கூட ஒரு ஷரீஆ கலாபீடம் நிறுவப்பட்டு வளர்ச்சியடைந்து வருகின்றது.

இத்தகைய சிறப்புகளுக்குச் சொந்தக்காரரான இவர் கண் பார்வையை தனது இளம் பராயத்திலேயே இழந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் ஹிஜ்ரி 1420 இல் (கி.பி.1999) இறையடி எய்தினாலும் அவரது கருத்துக்களாலும் சிந்தனைகளாலும் மக்கள் உள்ளங்களில் வாழ்ந்து வருகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைச் சரம்

### பாடசாலை

சின்னஞ்சிறு சிட்டாய்
வந்து சேர்ந்த எம்மை
சிறகடிக்கும் பறவைகளாய்
ஆக்கி வைத்த பாடசாலையை
அன்புடன் வாழ்த்துகிறேன்

பாலராய் வந்த
எம்மை பண்புடைய
மனிதராய் மாற்றியதும்
பாடசாலையே!

அன்பை அருளும்
நண்பர்களையும்
அறிவை பெருக்கும்
அகரத்தையும்
அன்பளிப்பாய் தந்த பாடசாலையை
வாழ்த்துகின்றேன்!
என்றும் வாழ்த்துகின்றேன்!

*ஐ.எப். ஷிபானா*
*தரம்: 8*
*பொ/அல்ஹிலால் மு.ம.வி*
*தம்பானை*

### புன்னகை

ஆயிரமாயிரம் வார்த்தைகளை
ஒரு நொடியில் உணர்த்திட
ஊமையான
ஓர் மொழி - புன்னகை

புதுமைகளை புரியாமல்
புகுத்திட
உள்ளங்களை
கொள்ளை கொண்டிடும்
ஓர் மந்திரம்
இல்லை இல்லை
அது ஓர் - தந்திரம்

முகங்களை அழகாக்கும் மர்மம்
நீ - நம்பும் முகப்பூச்சல்ல
உன் உள்ளத்தில் புதைந்திருக்கும்
புதையல்தான்
அந்தப் புன்னகை



இறைவன் மானிடத்திற்குக்
கொடுத்த
அருட்கொடை
அந்தப் புன்னகை
பூ முகத்தில் பொருத்திக் கொள்ள
மறுக்கிறது
இந்த மானுடம்

உறவே!
உன் முகமும் புன்னகையின்
இருப்பிடமாக கொஞ்சம்
இடம் கேட்கிறது
கொடுத்து விடு

*எம்.பீ. பாத்திமா ஹில்மா*
*காத்தான்குடி*

### சூரிய காந்தி



ஞாயிறு வருகையில்
ஞாபகித்து விழிப்பாய்
விடியலை நோக்கியே - உன்
இதழ்களை விரிப்பாய்
மக்களின் மனதிலே
இடம் பிடிப்பாய்
அமைதியான குணத்திலே
அந்நியரை ஈர்ப்பாய்
பெண்ணைப் போலவே
பொறுமையாய் இருப்பாய்
நீ எப்படி சுக்கிரனை
நோக்கித் திரும்புகிறாயோ!
அதே போல் கல்வியை நோக்கிச் செல்ல
மாணாக்கருக்கு கற்றுக் கொடு
சூரிய காந்தியே!

*ஏ.எம். பாத்திமா ரிஹாசா*
*தரம்: 10*
*புத்தளம்*

### அகரம்

அன்றாட வாழ்வில்
கரம் பிடித்து நிற்கும்
ரத்தினமே நீ எப்போதும்
நீடூழி வாழ்க! வாழ்க!

*எம்.என். முஸ்பிரா*
*தரம்: 10*
*நிக/நம்முவாவ மு.ம.வி*
*நம்முவாவ*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

**வினாப்பத்திரம் I**  **நேரம் 45 நிமிடம்**

தரப்பட்டுள்ள சொற்களால் விபரிக்கப் படுகின்ற உருவின் கீழ் கோடிடுக.

*01.* தாவர உண்ணி, அழகு, பறவை

*02.* மென்மை, அழகு, இதழ்

முதலில் தரப்பட்டுள்ள சொற்களுக்கிடையே காணப்படும் தொடர்புகளுக்கேற்ப மூன்றாவது தொடர்புடைய சொல்லின் கீழ் கீறிடுக.

*03.* புறா- பறவை- உடும்பு

i. பறப்பன ii. ஊர்வன

iii. முட்டையிடுவன


*04.* புத்தகம்- எழுத்து - மரம்

i. இலை ii. பழம் iii. காய்


*05.* விமானம்- ஆகாயம்- கப்பல்

i. பாதை ii நீர் iii. வானம்

பின்வரும் கோலத்தை அவதானித்து வெற்றிடத்திற்கு வர வேண்டிய சொல்லின் கீழ் கோடிடுக.

*06.* 


i. *6* ii. *9* iii. *18*

*07.* 


i. *36* ii. *18* iii. *15*

பொருத்தமற்ற சொற்கூட்டத்தைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.

*08.* i. பலா, அப்பிள், மாதுளை, பப்பாசி

ii. உடும்பு, பல்லி, ஓணான், மண்புழு

iii. காகம், கோழி, பறவை

*09.* i. இலை, தண்டு, வேர், மரங்கள்

ii. புத்தகம், பென்சில், பேனை, கொப்பி

iii. கட்டில், கதிரை, மேசை, வாங்கு

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

*10.* மாதம் ஒன்றின் 5ம் திகதி வெள்ளிக் கிழமை யாகும். அம்மாதத்தின் அடுத்த வெள்ளிக் கிழமை எத்தனையாம் திகதியாகும்?

i. *11*ம் திகதி ii *12*ம் திகதி iii. *13*ம் திகதி

வித்தியாசமான உருவைத் தெரிவு செய்க.

*11.*

| i. | ii. | iii. | iv. |
|---|---|---|---|
| A E B | D B A | C D A | E D A |
| D D E | A D E | B E A | B C B |
| C A B | A B D | E B D | A D E |

*12.*

| i. | ii. | iii. | iv. |
|---|---|---|---|
| ச ப ய | ப க பி | ச ப ம | ட ச ப |
| க ம ப | ட ம ய | ம ட ய | க ம பி |
| பி ட ம | ம ச ட | பி க ட | ட ய ம |

பொருள் தரக்கூடிய சொல்லை இனங்கண்டு அதன் கட்டத்தின் கீழ் கோடிடுக.




*13.*


| | | |
|---|---|---|
| க் த் | லி க் | வ ட் |
| ப | ஒ | ண் |
| ந தெ | பி ம் | டி ம் |

*14.*

| | | |
|---|---|---|
| சோ | கி தி | ப ட |
| ஞ் | த் | ன் |
| லை பூ | ரை | வி |

முதல் படத்திற்குப் பொருத்தமற்றதைத் தெரிந்து கோடிடுக.

*15.*    

*16.*    

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு சொற்களில் மூன்று ஒரே கருத்தை தரக்கூடியது. ஒன்று மட்டும் வித்தியாசமானது. அதனைக் கீறிடுக.

17. இல்லம், அகம், ஆலயம், மனை

18. மேனி, அவயம், உடல், உடம்பு

19. பாண், உணவு, ஆகாரம், இரை

20. வானம், விண், விசும்பு, உடு

பின்வரும் பாடலை அவதானித்து விடை தருக.

21. பாலை விரும்பிக் குடிக்கும்
எலியை துரத்திப் பிடிக்கும்
முகத்தை கையால் துடைக்கும்
அடுப்பங்கரையில் படுக்கும் ......................

22. வெய்யிலிலும் உதவுவான்
மழையிலும் உதவுவான்
பல வர்ணங்களில் மிளிர்வான்
அதிகம் பெண்களோடு இருப்பான்..............

கோடிட்ட சொல்லுக்கான எதிர்க்கருத்தை தெரிந்து கோடிடுக.

23. பாபு வியாபாரத்தில் அதிக இலாபம் அடைந்தான்.
(வருமானம், நட்டம், முன்னேற்றம்)

24. வெள்ளம் பள்ளத்தை நோக்கிப் பாய்ந்தது.
(குன்றை, குழியை, மேட்டை)

25. விஞ்ஞானிகள் மண்ணை ஆராய்ச்சி செய்தனர்.
(தரையை, விண்ணை, பூமியை)

வெற்றிடத்திற்கு வர வேண்டிய இலக்கத்தின் கீழ் கோடிடுக.

26. 50 + 10 = 100 - ........
i. 50 ii. 10 iii. 40


27. 20 x 2 = ...... + 25
i. 20 ii. 15 iii. 40

28. படத்தில் உள்ள பென்சிலை அளப்பதற்கு பயன்படுத்தக்கூடிய பொருத்தமான குறியீடு.



i. m ii. km iii. cm

பின்வரும் படத்தை அவதானித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.



ரூபா 75.00


29. மாம்பழம் ஒன்றின் விலை ரூபா 30 எனின், தோடம் பழத்தின் விலை?

30. அப்பிள் ஒன்றினதும் மாம் பழம் ஒன்றினதும் விலை எவ்வளவு?

31. நிறுத்தி வைக்கப்பட்டுள்ள முச்சக்கர வண்டி களின் எண்ணிக்கை 24 ஆகும். அதன் மொத்த சில்லுகள் எத்தனை?

கணிதச் செய்கையைச் செய்து குறியீட்டின் பெறுமதியைக் காண்க.

32. 



33. 


பெறுமதி .............. பெறுமதி ..................

பின்வரும் பறவைகளுக்குப் பொருத்தமான பெயரைத் தெரிவு செய்து அதன் கீழ் எழுதுக.

(வான்கோழி, தீக்கோழி, நெற்குருவி, பருந்து, வல்லூறு)







34 ........... 35 ............ 36 ............ 37 ............

கருத்து தரக்கூடிய சொற்களை வைத்து சொற்கூம்பத்தை பூரணப்படுத்துக.

38.
39.
40.
41.
42.




சரியான விடைக்குக் கோடிடுக.

43. அது மரத்தில் (ஏறின, ஏறியது)

44. நான் நாயுடன் மைதானத்திற்குச் (சென்றோம், சென்றேன்)

45. பூனை ராதாவுடன் படுத்து (உறங்கினாள், உறங்கியது)

"அ" பகுதிக்குப் பொருத்தமான விடையின் குறியீடுகளை "ஆ" பகுதியில் தெரிந்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

| அ | | ஆ |
|---|---|---|
| 46. புறா | ....... | A பெயரும் வினையும் |
| 47. டங்கன் வைட் | ....... | B ஒட்டகம் |
| 48. நியூற்றன் | ....... | C குறுகுறுக்கும் |
| 49. முயல் | ....... | D புவி ஈர்ப்பு |
| 50. பாலைவனம் | ....... | E ஒலிம்பிக் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

**வினாப்பத்திரம் II**



**நேரம் 1 மணி 15 நிமிடம்**

பின்வரும் பாடலை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

நன்றாய் பாடம் படிக்கணும்
நலமாய் வாழ உழைக்கணும்
பெரியோர் சொல் கேட்கணும்
பார் புகழ வாழணும்

01. நாம் யாருடைய சொல் கேட்க வேண்டும் என பாடல் வரிகள் கூறுகின்றன?


02. பாடலில் இடம்பெற்ற பெயரும் வினையுமாக வந்துள்ள சொல்.

03. படிக்கணும் என்பதை எழுத்து வழக்கில் தருக.

04. பெரியோர் என்பதன் எதிர்ப்பதம்?


05. கீர்த்தி என்ற கருத்தைத் தரும் பாடலில் இடம் பெற்றுள்ள சொல்?

கீழ்வரும் இரு படங்களுக்கும் பொருந்தாத வாக்கியத்திற்குக் கோடிடுக.


06. 
1. புல் தின்னும்
2. ஊன் உண்ணி
3. பால் தரும்



07. 
1. எரிபொருள் தேவை
2. தரைப் போக்குவரத்து
3. துவிச்சக்கரம்



08. 
1. முக்கனி
2. உள்நாடு
3. வெளிநாடு



பின்வரும் சிங்கள சொற்களுக்கான கருத்தை எழுதுக.

09. முஹுன: ..................

10. மாலு: ..................

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

11. தாவர இலைகளில் கூடு கட்டும் பிராணி எது?
i. தேன் குருவி ii. தூக்கணாங் குருவி
iii. செவ்வெறும்பு

12. சுற்றாடலில் பகலிலும் இரவிலும் சஞ்சரிக்கும் பிராணி எது?
i. கரப்பான் ii. பல்லி iii. நுளம்பு

13. மிகக் கூர்மையான பார்வைத் திறன் உள்ள பிராணி எது?
i. காகம் ii. கழுகு iii. மான்


14. கைகளைக் கழுவாது உணவை உட்கொள்ளும் போது ஏற்படக்கூடிய நோய் எது?
i. இரைப்பைப் புண் ii. வயிற்றோட்டம்
iii. கண்டமாலை

15. கொழும்பு மாநகரம் அமைந்துள்ள மாகாணம் எது?
i. வட மாகாணம் ii. மேல் மாகாணம்
iii. வடமேல் மாகாணம்

16. காந்தம் ஒன்றினால் கவரக்கூடிய பொருள் எது?
i. வெள்ளி ii. அலுமினியம் iii. உருக்கு

17. ரூபா 47.50 விலையுள்ள ஒரு பேனையும் ரூபா 15.75 விலையுள்ள கொப்பியும் வாங்கும் என்னிடம் ரூபா 50.00 உள்ளது. மேலும் எவ்வளவு பணம் தேவை?

18. அருகிலுள்ள உருவில் நிறந்தீட்டிய பகுதியை முழுப் பின்னத்தில் எழுதுக.



______________

19. 9919, 9099, 9909 இம் மூன்று எண்களிலும் மிகப் பெரிய எண் எது?

பின்வரும் வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்ட வாக்கியம்.


20. i. அண்ணன் பரீட்சையில் சித்தியடைந்தான்.
ii. பாகற்க்காய் கொடி இனத்தைச் சார்ந்தது.
iii. விமலன் காய்ச்சல் காரணமாக படசாலைக்கு சமுகமளிக்கவில்லை.

21. i. நற்சத்திரங்கள் வானை அழகுபடுத்தின.
ii. உழவன் வியர்வை சிந்தி உழைத்தான்.
iii. போயிலை உடம்புக்கு நல்லதல்ல.


தரப்பட்டுள்ள உருக்களிடையே பொருத்தமற்ற உருவின் கீழ் கோடிடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. 1 2 3 4



23. 1 2 3 4



24. தண்டில் பூத்துக் காய்க்கும் தாவரம் எது?

i. நெல்லி ii. இலுப்பை iii. கொய்யா

25. எமது நாட்டு தேசியக் கொடியில் காணப்படுவது.

i. அரச இலைகள் ii. தர்மச் சக்கரம்

iii. நிறைகுடம்

26. இலைகளில் பாலைக் கொண்டிருக்கும் தாவரம் எது?

i. பூவரசு ii. எருக்கலை iii. புளிய மரம்

27. உணவு சமைக்க மிகப் பொருத்தமான பாத்திரம்

i. அலுமினியப் பானை ii. மண் பானை

iii. பித்தளைப் பானை

28. இலங்கை வாழ் மக்களின் ஒற்றுமையை வெளிப் படுத்துவது.

i. தேசியக் கொடி ii. பாடசாலைக் கொடி

iii. பௌத்த கொடி

29. தனி நபரின் பாவனைப் பொருள் எது?

i. சவர்க்காரம் ii. கட்டில்

iii. தொலைக்காட்சி

30. தாயின் வயது மகளின் வயதின் 3 மடங்காகும். மகளின் வயது 20 எனின் தாயின் வயது?

i. 40 வயது ii. 60 வயது iii. 50 வயது

31. பூவிதழ்கள் கூடுதலாகக் காணப்படும் பூ எது?

i. மல்லிகை ii. அந்தூரியம் iii. தாமரை

பின்வரும் இலைகளுக்குப் பொருத்தமான பெயரைத் தெரிவு செய்து அதன் கீழ் எழுதுக.

(பூசணி, கொடித் தோடை, பலா, பப்பாசி, ஈரப்பலா)



32 ............ 33 ............. 34. ............. 35 .............

36. ரூபா 167.50ற்கு பெறுமதியான பொருட்களை வாங்கிக் கொண்டு ரூபா 500ஐக் கொடுத்தால் மிகுதியாகக் கிடைக்கும் பணம்?

37. அடுத்து வர வேண்டிய எண்கள் யாவை?

1070, 1080, 1090, ........, ..........

38. நான்கு அப்பிள் பழங்கள் ரூபா 50க்கு வாங்கினால் ஒரு அப்பிள் பழத்தின் விலை.

39. மலை நாட்டின் ஒரு பகுதியில் மண்சரிவு ஏற்படவுள்ளதை அப் பகுதி மக்களுக்கு அவசரமாக தெரியப்படுத்த மிக உகந்த தகவல் தொடர்பு சாதனம் யாது?

i. வானொலி ii. தொலைபேசி


iii. ஒலி பெருக்கி

40. விற்றமின்களையும் கனிப்பொருட்களையும் வழங்கும் ஆரோக்கியமான பானம் எது?

i. இலைக் கஞ்சி ii. மென் குளிர்பானம்

iii. நீர்

41. இவ்வுருவில் மின்கலத்துடன் மின்குமிழ் பொருத்தப்பட்டுள்ளது. இதனை அவதானித்து சரியான விடையின் கீழ் கீறிடுக.



i. மின்குமிழ் ஒளிரும்

ii. மின்குமிழ் ஒளிராது

iii. மின்கலம் ஒளிரும்

42. பாசமான எனது தம்பி என்ற தலையங்கத்தில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.

## நேர்மை

நேர்மை என்றால் உண்மையாக இருப்பது. இது பொய், திரித்துச் சொல்வது போன்றவற்றிற்கு எதிரானது என்று பொருளாகும்.

'நம்பகமாக இருப்பவர்' என்ற நற்பெயரை உருவாக்குங்கள். வீட்டிலும் வேலையிலும் அல்லது சமுதாயத்திலும் எந்த வகை உறவுமுறையையாவது வளர்க்கின்ற ஒரு விஷயம் இருக்கிறது என்றால், அது நாணயமே ஆகும்.

கடமைகள் மற்றும் பொறுப்புக்களை காப்பாற்றாதிருப்பது நேர்மையற்ற பண்பிற்கு ஒப்பாகும்.

நேர்மை திறந்த மனதையும் நம்பத் தன்மையையும் ஒளிவுமறைவின்மையையும் ஊக்குவிக்கிறது. இது ஒருவர் தனக்கும் பிறருக்கும் மரியாதை செலுத்துவதைக் காட்டுகின்றது. நேர்மை என்பது உள்ளார்ந்த குணத்தில் இருக்கிறதே தவிர வெளிப்புற நடத்தையில் இல்லை. பொய் வேகமாக இருக்கலாம்; ஆனால் உண்மை நீடித்து இருக்கும். நாணயம் கம்பெனிகளின் சிற்றேடுகளிலோ அல்லது சிறப்புப் பட்டங்களிலோ இல்லை. ஒருவரது பண்பில்தான் இருக்கிறது.

("உங்களால் வெல்ல முடியும்" என்ற நூலிலிருந்து)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிராஜுல் ஹஸன்

# எப்படிப் பேச வேண்டும்?

உலகமே இன்று பேசிக்கொண்டுதான் இருக்கின்றது. இந்தக் கைப்பேசி வந்ததிலிருந்து மூடியிருக்கும் வாய்களைப் பார்ப்பதே அரிதாகி விட்டது. எப்பொழுது பார்த்தாலும் யாரிடமாவது யாராவது பேசிக்கொண்டேதான் இருக்கிறார்கள்.

நம்முடைய உரையாடல்களை சற்று கவனித்துப் பார்த்தால் பயனுள்ள பேச்சுகளைவிட பயனற்ற வீண்பேச்சுக்கள்தான் அதிகம் இருக்கும். நம்மில் எத்தனை பேர் உரையாடல் கலையை உருப்படியாகப் பயன்படுத்துகிறோம்?

இறைவனின் அருள்நெறியாம் இஸ்லாம் மற்றவர்களுடன் எப்படிப் பேச வேண்டும் என்பதை அழகாக விளக்குகிறது. இஸ்லாம் கற்றுத் தரும் அடிப்படைப் பண்புகளில் உரையாடல் கலை மிக முக்கியமான ஒன்று.

பேசுவதற்கு முன்னால், 'இப்பொழுது பேச வேண்டிய தேவை இருக்கிறதா?' என்று ஒரு வினாடி யோசித்துக் கொள்ளுங்கள். தேவையில்லாமல் பேசாதீர்கள். எதற்கெடுத்தாலும் வளவளவென்று பேசிக் கொண்டிருந்தால் நமது கண்ணியம் குறைவதுடன் பொறுப்பில்லாதவன் என்று முத்திரையும் விழுந்துவிடும். ஆகவே, தேவைப்பட்டால் மட்டும் பேசுங்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"பேசுவது வெள்ளி என்றால் மௌனமாக இருப்பது தங்கமாகும்."

அடுத்து யாரிடம் பேசுகிறோம் என்பதை அறிந்து பேசுங்கள். மலர்ந்த முகத்துடன் மென்மையாகவும் இனிமையாகவும் உரையாடுங்கள். ஒரேயடியாகக் கத்திப் பேசாதீர்கள். ரொம்பவும் குரலைத் தாழ்த்திக் கொள்ளவும் வேண்டாம். பேச்சில் நடுநிலை தொனியைக் கடைபிடியுங்கள்.


இதோ, திருக்குர்ஆன் கூறுகிறது:

"உன்னுடைய குரலைச் சற்றுத் தாழ்த்திக் கொள். திண்ணமாக, அனைத்துக் குரல்களிலும் மிகவும் அருவருப்பானது கழுதையின் குரலாகும்." (31: 9)

பிறரைப் புண்படுத்தும் வகையிலோ, கிண்டலடித்தோ பேசாதீர்கள். கண்ணியமான நகைச்சுவை என்பது வேறு; பிறரை நக்கலடித்துக் கிண்டலடிப்பது என்பது வேறு. நகைச்சுவை எனும் பெயரில் ஒரு போதும் ஆபாசமான அபத்த ஜோக்குகளை அள்ளி விடாதீர்கள். உங்களை மற்றவர்கள் தவறாக நினைக்கக் கூடும்.

முரட்டுத்தனமாகப் பேசாதீர்கள். அறிவார்ந்த முறையில், உள்ளங்களை ஈர்க்கும் வகையில் பேசுங்கள், உரையாடல் கலை பற்றி குர்ஆனில் படிப்பினை மிக்க நிகழ்வு ஒன்றுண்டு.

எகிப்தில் பிர்அவ்ன் எனும் கொடுங்கோல் மன்னன் ஆட்சி புரிந்து கொண்டிருந்தான். அவனிடம் சென்று சத்தியத்தை எடுத்துரைக்கும்படி இறைதூதர் மூஸா அவர்களை இறைவன் அனுப்புகிறான்.



பிர்அவ்ன் ஆணவமும் செருக்கும் கொண்ட மன்னன். இஸ்ரவேல் சமூகத்தில் பிறக்கும் ஓர் ஆண் குழந்தையால் தன் ஆட்சிக்கும் உயிருக்கும் ஆபத்து நேரும் என்று ஜோதிடர் சொன்னதை நம்பி அந்தச் சமூகத்தில் பிறக்கும் ஆண் குழந்தைகளை எல்லாம் கொல்லும்படி ஆணையிட்டவன். 'நானே மகத்தான கடவுள்' என்று வெளிப்படையாக அறிவித்தவன்.

இப்படிப்பட்ட கொடுங்கோலனிடம் சத்தியத்தை எடுத்துரைக்க மூஸா நபியை அனுப்பியபோது இறைவன் அவருக்கு என்ன அறிவுரை கூறினான் தெரியுமா? குர்ஆன் கூறுவதைப் பாருங்கள்:

"பிர்அவ்னிடம் சொல்லுங்கள். திண்ணமாக அவன் வரம்பு மீறி விட்டிருக்கிறான். அவனிடம் நீங்கள் மென்மையாகப் பேசுங்கள். அவன் அறிவுரையை ஏற்கக் கூடும் அல்லது அஞ்சக் கூடும்."

(20: 43-44)

என்ன ஒரு மகத்தான அறிவுரை! மக்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்டி வதைத்துக் கொடுங்கோல் ஆட்சி புரியும் மன்னனிடம் பேசும்போதுகூட மென்மையைக் கடைபிடிக்கும்படி தன்னுடைய தூதருக்கே இறைவன் கட்டளையிட்டிருக்க, நாம் பெற்ற தாயிடமும் உற்ற நண்பர்களிடமும் சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் எரிந்து விழுவது நியாயமா என்று யோசித்துப் பாருங்கள். அதேபால் இன்னோர் அருமையான பண்பாட்டை இஸ்லாம் கற்றுத் தருகிறது.

இரண்டு பேர் பேசிக் கொண்டிருக்கும்போது அவர்களின் அனுமதியின்றி நீங்கள் அந்த அறைக்குள் நுழையக் கூடாது என்று அண்ணல் நபிகளார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) தடுத்துள்ளார்கள். அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது தேவையின்றி இடை மறிக்காதீர்கள். கட்டாயம் உங்கள் கருத்தைச் சொல்லித்தான் ஆக வேண்டும் எனில், அவர்களின் அனுமதி பெற்று பேசுங்கள்.

உங்களிடம் யாரேனும் ஒருவர் பேச வந்தால் அவரைப் பேச விடுங்கள். அவர் கூறுவதை முழுமையாகக் கேட்ட பிறகு நன்கு சிந்தித்துப் பதில் அளியுங்கள். சிந்திக்காமல் பதில் அளிப்பது உங்கள் அறிவீனத்தை வெளிப்படுத்திவிடும். ஒருவர் இன்னொருவரிடம் வினா தொடுத்துக் கொண்டிருக்கும்போது நீங்கள் முந்திரிக் கொட்டை போல் பதில் அளிக்க முந்தாதீர்கள். அது அநாகரிகமாகும்.

உரையாடல் கலை பற்றி பெண்களுக்குச் சில சிறப்பான வழிகாட்டுதல்களைக் குர்ஆன் வழங்குகிறது. அந்நிய ஆண்களிடம் பேசும்போது குழைந்து குழைந்து பேசாதீர்கள் என்றும் அத்தகைய குழைவான பேச்சுக்கள் ஆண்களின் மனங்களில் தீய எண்ணங்களை ஏற்படுத்தக் கூடும் என்றும் எச்சரிக்கிறது. குர்ஆன் கூறுகிறது:

**“நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சக் கூடியவர்களாய் இருந்தால் குழைந்து குழைந்து பேசாதீர்கள். ஏனெனில் உள்ளத்தில் கெட்ட எண்ணம் கொண்டிருக்கும் யாரேனும் ஒருவன் சபலம் கொள்ளக் கூடும். ஆகவே தெளிவாய், நேர்த்தியாய்ப் பேசுங்கள்.” (33:32)**

உரையாடல் உன்னதக் கலையாகும். அதை முறையாகப் பயன்படுத்தினால் இம்மையிலும் வெற்றி பெறலாம்; மறுமையிலும் ஈடேற்றம் அடையலாம் என்று அண்ணலார் கூறியுள்ளார்கள். பின்வரும் நபிமொழியைக் கவனியுங்கள்:

**“ஒருவன் தன் இரண்டு தொடைகளுக்கும் இடையே இருப்பதையும் இரண்டு தாடைகளுக்கு இடையே இருப்பதையும் பாதுகாப்பதாக எனக்கு வாக்குறுதி தந்தால் அவனுக்கு சொர்க்கம் கிடைக்கும் என்ற வாக்குறுதியை என்னால் வழங்க முடியும்.”**

நாவைப் பேணி வாழ்ந்தால் நன்மையே விளையும் என்பதை இதைவிட அழகாக எப்படிச் சொல்ல முடியும்? அழகிய, பயனுள்ள உரையாடல் என்பது இஸ்லாம் கற்றுத்தரும் இனிய பண்பாடுகளில் ஒன்றாகும்.

# நீல் ஆம்ஸ்ரோங் உலகை விட்டுப் பிரிந்தார்

நிலவில் முதல் முறையாக காலடி எடுத்து வைத்த அமெரிக்க விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ட்ரோங் தனது 82 ஆவது வயதில் 25.08.2012 அன்று காலமானார். கடந்த 1969ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் திகதி சந்திரனில் முதல் முறையாக காலடி எடுத்து வைத்த நீல் ஆம்ஸ்ட்ரோங், “இது என்னுடைய சிறிய காலடி. ஆனால் மனித குலத்துக்கே ஒரு மாபெரும் பாய்ச்சலாகும்'' என்ற பிரபலமான வாசகத்தை அப்போது வெளியிட்டிருந்தார்.

ஆம்ஸ்ட்ரோங்கிற்கு கடந்த நவம்பரில் அமெரிக்காவின் உயர் பிரஜைக்கான தங்கப் பதக்கத்தை வழங்கி அந்நாட்டு காங்கிரஸ் கௌரவித்தது.

அப்பலோ 11 விண்கலத்தின் குழுத் தலைவராக விண்வெளி சென்ற ஆம்ஸ்ட்ரோங் நிலவில் முதல் முறையாக காலடி எடுத்து வைத்த நிகழ்வை உலகம் முழுவதிலும் இருந்து 35 கோடியே 28 இலட்சம் மக்கள் கண்டுகளித்தனர்.



நீல் ஆம்ஸ்ட்ரோங்கின் முழுப் பெயர் நீல் அல்டென் ஆம்ஸ்ட்ரோங். இவர் 1930ம் ஆண்டு ஒகஸ்ட் 05ம் திகதி ஒகயோவில் உள்ள வபாகொனெட்டாவில் என்ற இடத்தில் பிறந்தார். இவர் தனது 6 ஆவது வயதில் முதல் முறையாக விமானத்தில் பயணித்தார்.

1950களில் கொரிய யுத்தத்தின்போது ஆம்ஸ்ட்ரோங் அமெரிக்க விமானப் படையின் ஜெட் விமானத்தை செலுத்தியுள்ளார். பின்னர் 1962 இல் ஆம்ஸ்ட்ரோங் விண்வெளி செயற்திட்டத்தில் இணைந்து கொண்டார்.

பின்னர் அவர் அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாஸாவின் விண்கல தொழில்நுட்பத்திற்கான பிரதி இணை நிர்வாகியாக நியமிக்கப்பட்டார். எனினும், ஓர் ஆண்டில் நாஸாவில் இருந்து விலகிய அவர் சின்சினாட்டி பல்கலைக்கழக பொறியியல் துறை விரிவுரையாளராகப் பணியாற்றினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகரம் சிந்தனை

எந்தவொரு வேலையும் எவ்வாறு நடைபெற்று, எப்படி முடிவடைய வேண்டும்; அதன் இறுதி வடிவம் எவ்வாறு இருக்க வேண்டும்; அதன் தரம் எப்படி இருக்க வேண்டும் என்ற அனைத்து மனக்கோட்டைகளும் எமக்கு இருக்கும். ஆனால், நாம் மனக்கோட்டை கட்டியபடி அனைத்துமே நடைபெறுவதில்லை. ஆனாலும் ஏதோ எம்மால் முடியுமானவரை முயன்று விட்டோம்; முடிவும் நன்றாக வந்துவிட்டது என்று இருந்து விடுகிறோம். அப்படியிருக்காமல் தாம் கற்பனை செய்தவாறு இறுதிவரை நடைபெற வேண்டும் என்று விடாப்பிடியாக இருந்தவர்கள்தான் வரலாற்றின் சாதனைப் பக்கங்களை அலங்கரித்துள்ளார்கள்.

# நினைத்ததை அடையும் வரை

# முயற்சி செய்து கொண்டேயிருங்கள்



### அயராத முயற்சியின் அறுவடை

**ஹென்றி ஃபோர்ட்**, உலகின் ஃபோர்ட் வகைக் கார்களின் நிறுவுனர். அப்போது அவர் தனது கார்களுக்கு புதிய வடிவம் கொடுக்கத் தீர்மானித்திருந்தார். அதன் ஓர் அம்சமாக 'V8' ரக காரை உற்பத்தி செய்யத் திட்டமிட்டு காரின் எட்டு சிலிண்டர்களும் ஒரே பிளக்கில் இடம்பெறும்படி வடிவமைக்க விரும்பினார்.

பின்னர் இதற்கான வடிவத்தை வரைந்து அதனைத் தயாரிக்கும்படி அவரிடம் பணியாற்றிய இன்ஜினியர்களிடம் கட்டளையிட்டார். இன்ஜினியர்களுக்கோ இது சாத்தியமில்லாத விஷயம் என்றே தோன்றியது. என்றாலும் ஃபோர்ட்டின் கட்டளைக்காக டிஸைனை வரைந்தார்கள்.

அதனை அவரிடம் காட்டியபோது, "அதனை செய்யுங்கள்" என்று கட்டளையிட்டார்.

"அவ்வாறு செய்ய இயலவில்லை" என அவர்கள் நம்பிக்கையிழந்து முணுமுணுக்க ஆரம்பித்தனர்.

"தாமதிக்காமல் வேலையில் இறங்குங்கள். எத்தனை நாட்களானாலும் பரவாயில்லை, அதனைச் செய்தேயாக வேண்டும்" உறுதியாகக் கட்டளையிட்டார் ஃபோர்ட். ஃபோர்ட்டின் நிறுவனத்தில் தொடர்ந்தும் பணியாற்ற வேண்டுமென்றால் வேலையைத் தொடர்வதைத் தவிர வேறு வழியில்லை.


நாட்கள், வாரங்கள், மாதங்கள் ஓடின. எத்தகைய முன்னேற்றமும் இல்லை. "இது சாத்தியப்படாது" என்ற அவநம்பிக்கை மொழி அவர்களின் உரையாடல்களில் தொடர்ந்தது. முயற்சியை மீறிய தளர்ச்சியும் அவர்களை வாட்டியது. வருட முடிவில் நிலைவரத்தை விசாரித்தார் ஃபோர்ட். பதில் சொல்ல முடியாமல் தவித்தார்கள் இன்ஜினியர்கள்.

"உடனே வேலையைத் தொடருங்கள். எனக்கு அந்த இயந்திரம் வேண்டும். அதனை நான் கண்டுபிடித்தே தீருவேன். அதனை உருவாக்காமல் விடமாட்டேன்" என்று ஆணித்தரமான முழங்கினார் அவர். அவர்களும் செய்வதறியாது தொடர்ந்து முயற்சித்தார்கள். முயற்சி வீண்போகவில்லை. இறுதியில் அவர்கள் அதனைக் கண்டுபிடித்தார்கள். நினைத்ததை அடையும் வரை தொடர்ச்சியான, அயராத முயற்சிகள் வீண்போவதில்லை.

இப்படி தன்னம்பிக்கையோடு விடாமுயற்சி செய்பவர்கள் மனம் தளராது சாதிக்கிறார்கள். தன்னம்பிக்கைக்கு என்றும் மரணமில்லை. திட்டமிட்டபடி 100 வீதம் செயற்படுத்துவது சாத்தியமில்லை என நினைக்கிறோம். எனவே, கிடைக்கின்ற முடிவுகளோடு சுருங்கி விடுகிறோம். ஆனால், நினைத்தபடி நடக்கும் வரை தொடர்ந்து முயற்சித்துக் கொண்டேயிருந்தால் அது சாத்தியமாகும் என்ற உண்மையை மறந்து விடுகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள்




எம்.ஐ.. ஹமீதா
தரம்: 9
கழுகமுவ மத்திய கல்லூரி




எம்.ஏ. ஹிஜானா விதாத்
தரம்: 3
தில்லையடி மு.ம.வி, புத்தளம்




பாத்திமா ஷம்லா
தரம்: 9
பு/ பாத்திமா மு.பெ.க, புத்தளம்



ஏ.எப். அல்ஜிப்ரான்
தி/ அல்தாரிக் மகா வித்தியாலயம்
கந்தளாய்




எம்.ஐ.எப். ஹுமைரா
தரம்: 4
க/ ஸாஹிரா கல்லூரி, கம்பளை




ஏ.எஸ்.எப். அமீனா
தரம்: 5
க/ கம்பளை ஸாஹிரா கல்லூரி




எம்.எப்.எப். ராலியா, தரம்: 3
கே/தெனு/ குருக்குத்தலை
மு.ம.வி, கடுகண்ணாவ




ஷஹீரா ஷஹீட்
தரம்: 8
கே/ தெனு/ வெலம்பொட மு.ம.வி



எம்.என்.எப். நஸ்ரின்
தரம்: 6
நாவலப்பிட்டி




எம்.எஸ்.எம். ஷாகிர்
தரம்: 3
க/கழுகமுவ மத்திய கல்லூரி
கெலிஓய





ஹனா ஸகி
தரம்: 3
கே/ கழுகமுவ ம.க, கெலிஓய



ஏ.எஸ்.எப். அம்ரா, தரம்: 7
க/ கம்பளை ஸாஹிரா கல்லூரி




எம்.எம்.எப். முன்சிபா
பதுரியா மத்திய கல்லூரி
மாவனல்லை




ஏ.எஸ்.எப். சபியா அலிகார்
தரம்: 7
கள் எலிய ம.வி


**அடுத்த சித்திரத்திற்கான தலைப்பு: ஆசிரியர் தினம் - இறுதித் திகதி: 25.08.2012**

www.aharam.lk
facebook இல் Like செய்யுங்கள்...
www.facebook.com/aharamJmf
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JMF இன் வெளியீடுகள்




அல்ஹஸனாத் (1970 இலிருந்து...)
www.alhasanath.lk





பிரபோதய (1984 இலிருந்து...)
www.prabodaya.lk




எங்கள் தேசம் (2002 இலிருந்து...)




அகரம் (2005 இலிருந்து...)
www.aharam.lk




The Trend (From 2011)
www.thetrend.lk

**JMF**
Just Media Foundation
77, Dematagoda Road,
Colombo 00900,
Sri Lanka.
Tel: 0094112689324
Fax: 0094112686030
E mail: jmflanka@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org